அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No. 105.

ACC. No. 18586

மலர்: 8 இதழ் 3 விலை அ. 4	துன்முகி௵ ஆனிமீ ஜூன்-ஜூலை—1956	வருட சந்தா ரூ. 2-4-0

சிலந்திவிழுத் துமித்தாளை சினக்கின்ற நீல நக்கர்.
பெரியபுராணச் சித்திர விளக்கம் 27; பக்கம் 125)

பொருளடக்கம்

		பக்கம்
1. ஸத்ஸங்கம்	(திருப்புகழ் மணி) ...	97
2. சொல் மாலை (அனுபூதி விளக்கம்)	(கி. வா. ஜகந்நாதன்) ...	101
3. கல்யாணர் (முருகனடியார்)	'ரசபதி' ...	105
4. சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினர் தல வழிபாடு	...	112
5. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்	(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.,)	115
6. வள்ளிச் சன்மார்க்கம்	(கே. எஸ். நாகராஜன்) ...	121
7. திருநீல நக்கர்	(கி. வா. ஜ.) ...	125
8. கொம்பனையார் (திருச்செந்தூர்த் திருப்புகழ் விரிவுரை)	(குகஸ்ரீ) ...	129
9. அரிதா? எளிதா?	(மு. பொன்னையா பிள்ளை) ...	138
10. Heroism of Draupadi	*(Thiruppugal Mani)* ...	142

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே துன்முகி ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ" முதல் உள்ள முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

DR. BESANT

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ ஆனி ௴ ஜுன்—ஜுலை - 1956	இதழ் 3

ஸத்ஸங்கம்

(திருப்புகழ் மணி)

மானிடன் மோக்ஷம் அடைவதற்கு அநேக மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. மோக்ஷம் என்பது விடுதலை. ஆசாபாச காமக்ரோத ஆணவாதிகளி லிருந்து மனிதன் விடுதலைப்பட வேண்டும். அந்த நிலை பெற்றுவிட்டால், ஆண்டவன் சரணத்தை அடைகின்ருன். இந்த நிலை அடைவதற்கு முன்னல், துக்கத்தாலும் கவலையாலும் பாதிக்கப்படுகின்ருன். அந்த நிலையை அடைந்துவிட்டால் ஆனந்த ஸாகரத்தில் ஆழ்ந்துவிடுகிருன். வேற்றுமை எனும் ஸம்ஸார ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு எவ்வளவோ வகைகள் உபதேசிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கலியுகத்தில் மிகவும் ஸுலபமாய் அநுஷ்டிக்கக்கூடியதும், சீக்கிரத்தில் பலன்கொடுக்கும் மார்க்கம் பக்தியென்று சொல்லப்

அன்னே எனையளித்த அப்பா நீ இவ்வுலகில்
இன்னம் இரங்கிலையேல் எவர்காப்பர் தேவே.

படுகின்றது. பக்தியை நாடி மோக்ஷத்தை அடைந்த பெரியோர்கள் பலர். அருணகிரியார் திருப்புகழில் ஞானம், தானம், யோகம், யாகம், ஜெபம், மந்திரம் முதலிய சற்றேனும் இல்லாத தன்னை மீட்டுக் கொள்ள வேண்டும் என்று முருகனை பிரார்த்திக்கின்றார்.

"மூலமந்திரம் ஓதல் இங்கிலை,
ஈவதிங்கிலை நேயம் இங்கிலை
மோனமிங்கிலை ஞானமிங்கிலை—மடவார்கள்
மோகமுண்டு அதிதாகமுண்டு அப
சாரமுண்டு அபராதமுண்டிரு
மூகனென்று ஒரு பேருமுண்டு—அருள்பயிலாத
கோர கும்பியிலே விழுந்திட—நினைவாகி
கூடுகொண்டு உழல்வேனை"

உய்ந்து கரையேற என்ன வேண்டுகின்றார்?

"ஞானநெஞ்சினர் பால் இணங்கிடு
கூர்மை தந்து இனி ஆள வந்தருள் புரிவாயே"!

ஞான நெஞ்சினர்கள், பக்தர்கள், சாதுக்கள். தெய்வத்தை நாடி நிற்பவர்கள் சாதுக்கள், சத்துக்கள். அவர்கள் இணக்கம் தருவாய் என்று வேண்டுகின்றார். ஸத்ஸங்கத்தின் மகிமையை இந்தத் திருப்புகழ் கூறுகின்றது.

ஸாதுக்கள் ஸத்ஸங்கம் ஒன்றே போதும்.

ஆதி சங்கரர் உபதேசிப்பதும் அதுவே.

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம்

பணியே விரும்பென்னைப் பயன்படுத்தி அவ்வழியில்
மணிநின் அடிநிழலில் மன்னவைத்தால் ஆகாதோ.

நிர்மோகத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி:"

அருள் பயிலாத கோல குணஹீன துன்பர்கள் ஸங்கம் துர்ஸங்கம். பக்தன் தன்னை அடைய வேண்டுமானல் இப்படிப்பட்ட துர்ஸங்கங்களை விட்டுவிட வேண்டும் என்றார் க்ருஷ்ணன் கீதையில். (ஸங்க வர்ஜித:) ஸத்ஸங்கம் யாவரையும் ஒருமைப் படுத்துவதால், அது ஸங்கமே அல்ல என்பது போலும். ஸ்ரீ க்ருஷ்ண பகவான் உத்தவருக்கு ஸத் ஸங்க மகிமையை எடுத்துரைக்கின்றார். (பாகவதம்—11-ஸ்கந்தம் 12 அத்தியாயம்.)

'என்னை ஸாதுக்கள் ஸங்கம் வசப்படுத்துவது போல் மற்றவை யொன்றும் வசப்படுத்துவதில்லை. யோகம், வேதஜெபம், மற்றை தர்மம், கோஸேவை, தேவ பூஜைகள், இயமநியமங்கள், கங்கை தீர்த்த ஸ்நானம், இவை போலும் மற்றெவைகளும் ஸாது ஸங்கம்போல் என்னை ஆகர்ஷிக்கிறதில்லை. உதாரண மாக எவ்வளவு பக்தர்கள் மேலே சொல்லப்பட்ட ஒழுக்க பழக்கங்கள் இல்லாமல் என்னை அடைந்திருக் கின்றார்கள். அவர்களில் சிலரைக் குறிப்பிடுகிறேன்:—

அஸுரர்கள், பக்ஷிகள், மிருகங்கள், கந்தர்வர், அப்ஸரஸ்கள், ஸர்ப்பங்கள், ஸித்தர்கள், சாரணர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், ஸ்திரீகள், ஐந்தாவது வர்ணஸ்தர்கள்.—இவர்கள் எல்லாம் என்னை ஸத்ஸங் கத்தால் அடைந்தனர். ப்ரஹ்லாதன், மஹாபலி, மயன்

பல்காதல் நல்லோர்க்குப் பயனும் பரம்பொருளே
ஒல்கா அவர்பணி, யான் உணர உணர்த்துதியோ.

விபீஷணன், ஸுக்ரீவன், ஹனுமான், ஜாம்பவன், கஜேந்த்ரன், ஜடாயு, தர்மவ்யாதன், கூனி, கோபிகைகள், யக்ஞ பத்தினிகள் இன்னும் பலரைச் சொல்கின்றார். இவர்கள் வேதங்களை அநுஷ்டிக்கவில்லை; மஹான்களை அண்டவில்லை; விரதங்கள் தவங்கள் செய்யவில்லை ஆயினும், ஸாது ஸங்கத்தினாலேயே என்னையடைந்தனர் என்று ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா சொன்னார்.

எங்கெங்கு சென்றாலும், ஸாதுஸங்கம் ஒன்றே தான் ஸம்ஸார சமுத்திரத்தைத் தாண்டப் பயன்படும் ஓடமாகிறது என்று ஆசாரியர்கள் சொல்லி யிருக்கின்றார். கபிலபகவான் தன் தாயார் தேவஹூதிக்கு உபதேசித்ததும் இதுவே.

இதில் விசேஷம் என்னவென்றால், ஆண்டவன் திவ்ய நாமங்களை விடாமல் பாடி அனுபவிப்பதாகும். பஜனைக் கூட்டங்கள் எல்லாம் ஸத்ஸங்கமே.

கொடிய கலியில் சுலபவழி. கூடு ஸத்ஸங்கத்தை. ஸுலபமாகவே பிறவிப் பயனையடையலாம். போதேந்திராள், அய்யாவாள், தீர்த்த வரதர் இம்மகான்கள் ஸாதுஸங்கத்தின் வழியும் காட்டிவிட்டார்கள். தெய்வ அருள் பெற்றுவிட்டால் யாவும் தானே வரும்.

கணேச கோவிந்த சிவோகம் ஷண்முகம்
குஹேச சரவண பவேச சரணம்
ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த ராம் ராம் ஹரிஹரி
ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த நாராயண ஹரி!

குமரா முருகா குகனென்பன் கோவே
எமராசன் நேர்கால் எனைக்காக்க வாராயோ.

சொல் மாலை

(கி. வா. ஜகந்நாதன்.)

(55—ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சமாகிய கல் உருகும்படியாக, தஞ்சமென்று தன்னைச் சரண்புகும் அடியவர்களுக்கு அருள் செய்யும் சண்முகப்பிரானுக்கு ஒரு மாலை சாத்த விரும்புகிறார் அருணகிரியார். அந்த மாலைதான் கந்தர் அநுபூதி. பூமாலையை விடப் பாமாலையே சிறப்புடையது அல்லவா? இறைவன் சுந்தரமூர்த்தி நாயனாரிடம், "அர்ச்சனை பாட்டே யாகும், ஆதலால் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று அருளினான். பூ அருச்சனையிலும் பா அருச்சனையில் உள்ளம் குளிர்பவன் இறைவன். அவனுடைய வேறு கோலமாகிய முருகனும் பாமாலையில் மகிழ்பவன். ஆதலால் அவனுக்குச் சொல் மாலையை அணிய நினைக்கிறார்.

அழகனாகிய முருகனுக்கு அணியும் மாலை எல்லா வகையிலும் சிறந்திருக்க வேண்டும். அவன் இப்போதுதான் புதிதாகப் பாமாலையைப் பெறுகிறவன் அல்ல. பல காலமாக நக்கீரர் முதலிய பெரும் புலவர் மணமிக்க மாலைகளை அணிய ஏற்று அருள் செய்திருக்கிறான். அவனுக்குச் சிறப்பில்லாத மாலையை அணியலாமா?

நல்ல இலக்கண அமைதியுடைய பாமாலையைச் சூட்ட வேண்டும் என்பது அருணகிரியார் ஆசை. இலக்கணம் என்பது அழகு. தமிழில் உள்ள அழகையே இலக்கணம் என்று சொன்னார்கள். ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு வரையறை, ஒவ்வோரமைப்பு உண்டு. அந்த அமைப்போடு அவை இருந்தால் அழகாக இருக்கும். அந்த அமைப்பு முறை மாறினால் அழகு கெடும். அப்படித்தான் தமிழுக்கும் சில வகை அமைப்புகள் உண்டு; அவை ஆற்றுக்குக் கரை போலவும், வயலுக்கு வரப்புப் போலவும், பூம்பொழிலுக்கு வேலி போலவும், அரண்மனைக்கு மதில் போலவும் இருப்பவை. அந்த மரபின்படி தமிழ்க் கவி அமைந்தால் அழகாக இருக்கும்; இலக்கண அமைதியே அழகு தருவது.

எள்ளுகின்றார் மேலோர் என்பாவம் நோக்கி
உள்ளுகின்றேன் அத்தா உவந்தேற்றுக்கொள்ளாயோ

முருகன் நூலறி புலவன். சங்கத் தமிழின் தலைமைப் புலவன். அகத்தியருக்குத் தமிழறிவித்த ஆசான். அவனைப் பாடும் பாட்டில் பிழை இருக்கலாமா? இயல் என்பது இலக்கண இலக்கியங்களுக்குப் பெயர்; சிறப்பாக இலக்கணத்துக்கு உரிய பெயர். "நான் சண்முகனுக்கு அணியும் மாலை இலக்கண அமைதி யுடையதாக, இயல் சேர்ந்ததாக இருக்க வேண்டும்" என்று அருணகிரிநாதர் வேண்டிக் கொள்கிறார்.

இயல்சேர்.................மாலை

இயல் என்றால் அதில் பல பிரிவுகள் உண்டு.

தமிழ் இலக்கணம் முன் காலத்தில் எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருளிலக்கணம் என்று மூன்று பிரிவாக இருந்தது. நாளடைவில் விரிந்து யாப்பிலக்கணமும் சேர்ந்து அப் பிரிவுகள் நான்காயின. பின்பு அணியிலக்கணத்துடன் சேர்ந்து ஐந்தாயின. அருணகிரிநாதர் காலத்தில் அந்த ஐந்தும் வழக்குக்கு வந்துவிட்டன. இயல் சேர்ந்த மாலையில் இந்த ஐந்து இலக்கணங்களும் சிறப்பாகப் பொருந்தியிருக்க வேண்டும்.

சொல் எழுத்துக்களால் ஆகியது; பொருளை உடையது. நல்ல பொருட் சிறப்பையுடைய சொற்களாகப் பாமாலையில் அமைய வேண்டும். எழுத்தமைதியும் செம்பொருளும் உள்ள சொற்கள் அமைந்த மாலையில் அலங்காரம் வேண்டும். மாலை என்றாலே கட்டப் பெற்றது என்று தெரியும். சொற்கள் மலர்களைப் போன்றவை. அதில் உள்ள எழுத்துக்கள் இதழ்களைப் போன்றவை. அதன் பொருள் மணத்தைப் போன்றது. யாப்பாகிய செய்யுள் அமைப்பு மாலையைப் போன்றது. அந்த மாலையில் உள்ள அலங்காரம் பூமாலையின் அழகைப் போன்றது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்தும் பாமாலையில் இருக்கின்றன. இதழ், மலர், மணம், கட்டின உருவம், அழகு இவை பூமாலையில் உள்ளன. இந்த இரண்டிலும் பாமாலை சிறந்தது. "ஐந்து இலக்கண

போற்றேன் திருப்புகழைப் போற்றுகின்றார் பொன்னடியை ஏற்றேன் இதயத்தில் என்பாவம் என்னேயோ.

அமைதியுமுடைய பாமாலையை நான் சண்முகனுக்கு இட வேண்டும்" என்பது அருணகிரி முனிவர் விருப்பம்.

இயல்சேர்

செஞ்சொற் புனை மாலை.

சொல் என்பதனால் எழுத்தும் சொல்லும் சொல்லப் பெற்றன. செஞ்சொல் என்று சிறப்பித்தது பொருட் சிறப்பை எண்ணி. புனைதல் அலங்காரத்தை நினைப்பூட்டி யது. மாலை யாப்பை நினைவுறுத்துவது. இவ்வாறு ஐவகை எழிலும் அமைந்த மாலை என்று கொள்ளும்படி பாட்டு அமைகிறது.

'இந்த மாலையை மூன்று கரணங்களும் சிறப்பான நிலையில் இருக்க நான் சண்முகனுக்கு அணிய வேண்டும்' என்கிறார் அருணகிரிநாதர். மாலையை அழகாகக் கட்டி வைத்த பிறகு அழுக்குக் கையோடேயா கொண்டு போய்ச் சாத்துவார்கள். கைகளைத் தூய்மையாக வைத்துக் கொண்டு பணிவுடன் அணிவிப்பார்கள்.

அவ்வாறே பாமாலையையும் உள்ளம் சத்துவ குணம் தலைப்பட்டுச் சிறந்து நிற்க அணிய வேண்டும்.

சிறந்து இடவே.

'நான் சிறந்து நின்று அணிய வேண்டும்' என்பது பொருள்.

நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந் துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொற்புனை மாலை சிறந்திடவே.

'இவ்வாறு சொல் மாலையை அணிவதற்கு விநாயகப் பெருமான் திருவருளை முதலில் பெற வேண்டும். ஆதலால் அவரைப் பணிவோமாக' என்று விநாயகர் காப்பைப் பாடு கிறார் அருணகிரிநாதர்.

நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருகத்
தஞ்சத்தருள் சண்முக னுக்கியல்சேர்
செஞ்சொற்புனை மாலை சிறந்துஇடவே
பஞ்சக்கர ஆனை பதம்பணிவாம்.

வேல்கொள் திருக்கரமும் விளங்கும் திருமுகமும்
மால்கொள்ள வந்தென்னை மகிழ்ந்தேற்ப தென்றேயோ

விநாயகரை, 'பஞ்சக்கர ஆனை' என்கிறார். ஐந்து இலக்கணமும் அமைந்த மாலையை அணிய ஐந்து கரங்களை உடையவனைப் பணிதல் பொருத்தம் அல்லவா? பஞ்சக்கரம்—ஐந்து கைகள். கணபதிக்கு நான்கு கைகளுடன் துதிக்கை ஒன்றும் சேர்ந்து ஐந்து கைகள் உண்டு. மற்ற யானைகளுக்கெல்லாம் ஒரு கைதான் உண்டு. இந்த யானைக்கு அஞ்சு கைகள் உள்ளன. மற்ற யானை பிறர் கொடுக்கும் பொருளைத் தன் ஒரு கையால் வாங்கிக் கொள்ளும். இந்த யானையோ ஐந்து கைகளால் வாரி வழங்கும்.

இந்த யானையின் பதத்தைப் பணிந்தால் எடுத்த காரியம் இனிது நிறைவேறும் என்று பெரியோர் கூறுவர். அந்த மரபையொட்டி விநாயக வணக்கம் செய்தார்.

விநாயகர் யானைமுகவனாக இருக்க இங்கே யானை என்று சொன்னார். மற்றவர் திறத்தில் கணபதி முகம் மாத்திரம் யானையாக இருப்பவர். ஆனால் முருகனுக்கு இன்பம் தரும் பொருளைச் சேர்ப்பிக்க வேண்டுமானால் அவர் யானையேயாக வருபவர். வள்ளியெம்பெருமாட்டியை முருகனோடு இணைத்து வைக்க யானையாகத்தானே வந்தார்; யானைமுகத்தானாக அல்லவே! வள்ளிநாயகியின் பூமாலையை முருகனுக்கு வாங்கித் தர யானையாக வந்த விநாயகரைத் தம்முடைய பாமாலை அவனிடம் நல்ல முறையில் சேரும்படி செய்ய நினைக்கிறார் அருணகிரிநாதர். ஆகவே, 'யானை பதம் பணிவாம்' என்றார்.

இது வரையிலும் சொன்னவற்றால் விநாயக வணக்கமாகிய இந்தப் பாட்டினால், கந்தர் அநுபூதிக்குப் பயன் நெஞ்சமாகிய கல் உருகுவது என்பதும், முருகன் தஞ்சமென்று தன் சரணத்தை அடைந்தவருக்கு அருள்புரிபவன் என்பதும், அவனுக்கு அணியும் சொல் மாலை ஐந்திலக்கணமும் பொருந்தியதென்பதும், அது நன்கு நிறைவேறும்படி செய்ய ஐந்துகரத்தனாகிய விநாயகரைத் தொழுதார் அருணகிரிநாதர் என்பதும் தெளிவாகின்றன. (தொடரும்)

———o———

உன்னை உணர்ந்துள்ளம் ஓலிடுதல் கண்டிருந்தும்
மன்னே அருளாமை திருவருட்கு மாண்பாமோ.

முருகனடியார்-15.

கல்யாணர்

(ரசபதி)

மிருஷ முனிவர், அகத்தியர் ஆசி பெற்ருர். பொதிகையில் இருந்து புறப்பட்டார். சிறந்த தமது ஊரான இதயாம்பரம் வந்து சேர்ந்தார். நல்லற இல்லறம் மகிழ்ந்து நடந்தது. கற்பிற் சிறந்த அவர் மனையாள், கருப்பம் எய்தினள். திலகம் என்பது அவள் பெயர்.

மார்கழி மாதம். வைகறை நேரம். பக்தர்கள் வீதியில் பஜனை செய்கிருர்கள்.

நமப் பார்வதீ பதயே! அரஹர மஹாதேவ!

இங்ஙனம் நாம சங்கீர்த்தனம் நடந்தது. அதே நேரத்தில் குவா குவா என்ற குழந்தையின் குரலும் கேட்டது.

ஆம். திலகம் பிரசவித்தாள். சுபமான நேரம், பிறந்தது பிள்ளை. மேலான இன்ப வெள்ளத்தில், மிருஷர் இதயம் மிதந்தது. பிள்ளைக்குக் கல்யாணர் என்று பெயரிட்டார்.

கவிழ்ந்து, தவழ்ந்து, இருந்து, எழுந்து, நடந்த மைந்தர்க்கு இப்போது வயது ஐந்து.

குணம் சிறந்த தந்தையே மைந்தர்க்குக் குருவாயினர். கலைகள் பலவும் கற்ருர். பாலர்க்கு இப்போதைய வயது பதினறு.

இன்று கல்யாணர், சதுர்வேத பாரங்கதர். புராண இதிகாசப் பொருள் நுட்பம் புரிந்தவர். சிறப்பாக, கந்தபுராணம் அவர் கருத்தைக் கவர்ந்தது.

* * *

ஊரை அடுத்து ஒரு பொதுத் தோப்பு. ஆருமற்ற அந்த இடத்தில் அமர்ந்தார்.

ஓம் குகேசாய நம: ஓம் குகேசாய நம: இப்படி இடையருது உருவேற்றி இருந்தார். அங்கிலேயில், அகத்தில் பதிந்தது அறுமுகன் உருவம். மாபெரும் இங்கிலேயில் மகிழ்ச்சி பிறந்தது.

மயிலேறிய மாமணி, குயில் இருபுறமுள குமரேசன் திருவுருவம், புறத்திலும் தோன்றிப் பொலிந்தது. திடுக்கிட்டது மனம்.

ஏனே இவற்கருளல் வேண்டாமென் றுன்னே
வானும் நிலனும் வள்ளால் மறுத்தனவோ.

அப்பா! அத்தா! அரசே! முருகா! ஹா! சிறந்த உம்மையா சேவிக்கிறேன்! என்று வீறிட்டுக் கூவினர். மெய்ம்மயிர் சிலிர்க்க எழுந்தார். கால்கள் தள்ளாடின. முயன்று நடந்தார். முடங்கி விழுந்தார். அழுது எழுந்தார். மறைந்தது உருவம். ஐயோ என்று அலறினர்.

ஹஹ்ஹாஹாஹா! நகை ஒலி. திடுக்கிட்டு நோக்கினர். ஆம். சாந்த பத வ்யோமமான சண்முகனர் திருவுருவம்.

வா! அருகே வா! வா!! என்று பெருநகை செய்கின்றன் பெருமான்.

நாரக நாதா! ஏரக இறைவா! தாரக தாணு நமோநம: என்று அன்பொடு பாடி அணுகினர். மயில் இறைவன் திருமேனி மறைந்தது; மயங்கியது மனம். ஒரு தரமா இந்தக் கூத்து? பலமுறையல்லவா நிகழ்ந்தது.

முருகா! அருள் வரதா! உயிருள் மருவும் இருளது ஒழிய, உவந்து எதிரில் வருகின்றய்! மகிழ்ந்த அப்போதே மறைகின்றய்!

உருகுகிறதே! என் உள்ளம் உடைகிறதே! நிலை குலைந்தும், உடலில் இன்னும் உயிர் நிற்கிறதே! என்று கதறுகிருர் கல்யாணர்.

* * *

மிருஷ முனிவர் பகல் உணவு கொண்டார். திலகம், தாம்பூலம் மடித்துத் தருகிருள். குமுறி அழும் குரல். திடுக்கிட்டு நோக்கினர் தம்பதிகள்.

ஹா! கல்யாணு! என்ன செய்தி? ஏன் அழுகிருய்?

அப்பா! சிறந்த மந்த்ர ஜெபம் செய்தேன். கருணையொடு முருகன் காட்சி யாயினன். நெகிழ்ந்து வணங்க நெருங்கினேன். மயிலிறைவன் திருவுரு மறைந்தது. நியதி இது, பலசமயம் நிகழ்ந்துளது. சேதாரம் செய்கிறது பாவச் சேறு. அச்சேறு உலராதா அப்பா! ஒழியாதா கன்மம்? அம்மா! என்று அலறினர்.

தந்தை, மைந்தரைத் தழுவினர். திகைத்து நிற்கிருள் திலகம்மை; தூய அவள் உதடு துடித்தது; கலுழ்ந்தது கண்ணீர்.

கல்யாணு! சிவத்தை எண்ணித் தவம் செய்யச் சென்றேன். தயவொடு வநதார் தமிழ் முனிவர். பெருந்தவப் பிரபுவான அவர் அருளால், உன்னைப் பிள்ளையாகப் பெற்றேன். கடுமையான பிரமசர்யம் கடந்தனை. இனி நீ இல்லறத்தை ஏற்றுக்கொள்! அதனல், அந்தக்கரணக் கோணல் எல்லாம் அடங்கும். வித்தக

புண்ணுகி உள்ளம் புழுங்குகின்றேன் புண்ணியனே
விண்ணுகி நின்றுயுன் விமலமுகம் காட்டாயோ.

அமைதி விளையும். அதன்பின், உருவேற்றும் மனுவால் உயர்ந்த பயன் உருவாகும். காணும் இடமனைத்தும் கந்தன். நிலையான நியதி இது. இதற்குள் மதிமருள்வது மரபு அல்ல.

அப்பா! வாழ்விக்க இதுவா வழி? இது மாறாத கவலையால் மடங்குகின்ற மார்க்கம்! தவசீலர் அகத்தியரைத் தரிசித்து, அறு முகனை அனுபவிக்கும் வழிமுறை அறிந்து வருகிறேன். ஆசி செய்து என்னை அனுப்புங்கள்!

நல்ல யோசனை. அப்படியே செய் என்று ஆசீர்வதித்தார் மிருஷர்.

தவஞ் சிறந்த அவர் நிலைக்கு அது சரி. பிரிவு பொறாத பெண்மை அறிவால், வயிற்றைப் பிசைந்து வருந்துகின்றாள் அன்னை.

வருந்தாதீர்கள் அம்மா! அம்மான் திருவருளுக்கு ஆளாகும் வழிமுறை அறிந்து வருகிறேன். அதுவரை ஆறி இரும். வணக்கம் என்று கல்யாணர், விறுவிறு என்று நடந்தார்.

காதம் பல கடந்தார். பொதிகை மலை அடைந்தார். நல்ல வேளை. அவர் வந்த நேரம், அகத்தியர் தியானம் நீங்கி எழுந்த நேரம். உருவத்தைப் பார்க்கிற போதே, இவர்தான் குறுமுனிவர் என்று உணர்ந்தார். கண்மழை பொழிந்தார். வலம் வந்து பணிந்தார். பரிவொடு அவரை அகத்தியர் பார்த்தார்.

ஸ்வாமின்! தங்கள் ஆசியால், மிருஷர் பிள்ளையாகப் பிறந் தேன். காட்சியாகும் கந்தன் திருவுருவம், வணங்க எண்ணும் போது மறைகிறது. காரணம் தெரியாமல் கலங்குகிறது மனம்.

கல்யாணா! அறுமுகத்தை நம்பியவன் நான். என் ஆசியால் பிறப்பாய்; சிறந்த பேறும் பெறுவாய் என்று அன்றே எண்ணி னேன். கேள்! கவனமாகக் கேள்!

ரூபத்தை ஆராதிக்கும் பொழுது, சொருபத்தில் நாட்டம் வேண்டும். பரமன் உருவைக் கண்கள் பார்க்கும். உள்ளம் உணரும். உணர்வு சொருபத்தில் ஒடுங்கும். இதுதான் லயநிலை. இந்த நிலையில் இருந்தார்க்கு, சிவம் அஹம் எனும் நிலை சித்திக்கும். இந்த ஆராதனையை, முதலில் நீ அரிய ஒரு தலத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

பந்தம் அகற்றும் பரம தலம் கதிர்காமம். ஐந்தெழுத்துப் பரம்பரைக்கு சொருப தலம் சிதம்பரம். ஓம் எழுத்து வழி யினர்க்குக் கதிர்காமமே மௌன பதி.

பன்முகத்தைப் பார்த்த பாவப் படிப்பழிய
என் முகத்தை ஐயா எதிர்நோக்கி வாராயோ.

இந்தா! இப்பெட்டியை வைத்துக் கொள். இதனுள் அறு கோணத் தகடு இருக்கிறது. இதனை எதிரில் வைத்து, ஓம் சரவண பவாய நம: என்று உருவேற்று. சொருப ஒளி தகட்டில் இறங்கும் வரை, முதிர்ந்த அன்பொடு முயற்சி செய்!

அதன்பின், பீஜ தகட்டை, விரும்பிய ஆலயத்தில் வைத்து வழிபடு. நீ எண்ணிய எண்ணம், அதன்பின் நிறைவேறும் என்றார் அகத்தியர்.

* * *

குறுமுனிவர் உதவிய கமன குளிகை துணை செய்ய, கல்யாணர், ககன வழியாகக் கதிர்காமம் வந்தார். குழுமிய பல குன்றுகளைக் கண்டார்.

பேசா ஊமைகள், அங்கு வந்து பேசுகிறார்களாம். செவிடர்கள் செவிடு நீங்கி, எதையும் சிரவணிக்கிறார்களாம். பிறவிக் குருடர் கண் பெறுகின்றனர். மடலர்க்கு மக்கள் பேறு. பாக்கிய சாலிகளான அவர்கள், வாயார அவைகளைச் சொல்லி வாழ்த்துகின்றனர். வாழ்த்தொலி வானளாவுகின்றது.

யானைகள் பிளிறிடுகின்றன. புலிகள் உறுமுகின்றன. கலங்கிய பக்தர்கள், கதிர்காமா! என்று கதறுகிறார்கள். அவ்வளவு தான். புறங்கண்டு அவைகள் ஓடிப் போகின்றன.

சிகண்டி முனிவர், சீடருடன் வருகிறார். துரத்தி வருகிறது ஒரு மத யானை. அரிய சீடர்கள் அலறுகிறார்கள். கொடியிலிருந்து, சிகண்டி ஒரு வெற்றிலையைக் கிள்ளினார். இன்ப இறைவா! கதிரேசா என்று அதை நோக்கி எறிந்தார்.

என்ன வியப்பு! வெற்றிலையே வேலாயிற்று. யானையைப் பிளந்தது. கண்ட கல்யாணர், கதிரைப் பெருமான் அருளை எண்ணி, கைகுவித்துக் கும்பிட்டார்.

மாணிக்கக் கங்கையில் நீராடினார். அனுட்டித்தார். ஆலய அண்மையில் அமர்ந்தார். பத்மாசனம் இட்டார். பசியகல, காற்றையே பருகினார். சடக்கரத்தை இரவும் பகலும் உருவேற்றியிருந்தார். மாபெரும் அமைதி யடைந்தது மனம். ஆறு மாதம் இடையில் அகன்றது.

* * *

விசு விசு என்று காற்று வீசியது. முதிர்ந்த மரங்கள் முறிந்தன. எற்று எற்று என்ற பயங்கர ஒலி எழுந்தது.

தீரா வறுமையது தீர்வேன்; திகழுலகில்
வாராமல் முத்தி வழங்க எதிர் வாராயோ.

ஐயோ! என்ன இது? எதிரில் சில பேய்கள் எழும்பிக் குதிக்கின்றன. அதுதானு? முனீஸ்வரன் ஒன்று, எதிரில் வந்து மொறுவியது. பாம்புகள் படையெடுத்தன. படம் எடுத்து ஆடின. மார் மேலும் தோள் மேலும் ஏறின. எண்ணும் போதே நம் இதயம் அதிர்கிறதே! கல்யாணர் சிந்தனை கந்தன் மேல் இருத்தலின், அவர் அவைகளை ஒரு பொருளாகவே உணர்ந்திலர். ஆடாது அசையாது இருந்தார்.

கிடீரென்று காடு முழுதும் தீப் பற்றியது. கண் விழித்தார் கல்யாணர். விலங்குகள் கலங்குகின்றன. பறவைகள் கூச்சலிட்டுப் பறக்கின்றன. ஒரே அல்லோல கல்லோலம். கல்யாணர் இருந்த இடம்விட்டு எழுந்திலர். அவர் மனம் சலனமே அடையவில்லை.

வரவர அத் தீ, சூரிய வட்டம்போல் சுழன்றது. தெளிந்து பந்துபோல் திரண்டது. எதிரில் இருந்த பெட்டிமேல் இறங்கியது. நொடித்து நுழைந்தது. பயனை தகட்டில் பாய்ந்தது. புனித அவ்வொளி, அதன்பின் கண்களுக்குப் புலப்படவில்லை. ஆ! ஆ!! நினைவு நிறைவேறியது என்று, மகிழ்ந்தது கல்யாணர் மனம்.

* * *

ஹிஹிஹிஹி எனும் சிரிப்பொலி, வனம் முழுதும் எதிரொலித்தது. யார் அது? ஏறிட்டு நோக்கினர்.

பச்சைப் புடவை. குளுமை முகம். கள்ளம் கபடு கலவாத பார்வை. கோலம், இவள் குறமகள் என்பதைக் குறிப்பிடுகின்றது.

ஸ்வாமி! பல நாளாகத் தாங்கள் பட்டினி. கண் திறவாத கடும் தவம் கலைவது கூடாது என்று இருந்தேன். பயனை இவைகளை உண்டு பசியாறுங்கள் என்று, பழவகை பருப்பு வகைகளை நிறைத்த ஒரு தட்டை எதிரில் வைத்தாள்.

அடடே! வேண்டவே வேண்டாம்! எடு முதலில் இதை!

அப்படிச் சொல்வது கூடாது ஸ்வாமி! தங்களைப் போன்றவர்களை உபசரிப்பது எங்கள் தொழில். கொஞ்சமேனும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொஞ்சுகிருள். ஸ்வாமி ஸ்வாமி என்று கெஞ்சுகிருள்.

அவள் விநயம் அறிந்து, இரக்கம் மனத்தில் எழுந்தது. மாசற்ற மனம். மறுப்பது இனியும் மரபல்ல என்று எண்ணியது மனம். உவந்து சிலவற்றை உண்டார்.

பாராய் அருள்விழியால், பணியாய் அடியர்பணி,
தாராய்நின் தாள்மலரைத் தலைசூட்டிக் கொள்வேனே

எத்தனையோ மாதமாக நீர் சிறந்த தவம் செய்தவர்! நோகுமே பாவம். கால்களைப் பிடிக்கட்டுமா? கொஞ்சம் இடுப்பைப் பிடித்து விடுகிறேன் ஸ்வாமி!

அடடே! வேண்டவே வேண்டா என்று மறுத்தார். நாகரிக வாழ்க்கையர்க்கு, இதயத்தில் வஞ்ச நஞ்சு. மறவர் குறவர் என்று மறுக்கலாம். இரக்கம் நேர்மை இவர்களிடந்தான் இருக்கிறது என்று எண்ணியது மனம். இரண்டொரு நாள் இப்படியே உவகை தரும் உபசரிப்பு.

*　　　*　　　*

இனி புறப்படுவம். இதயாம்பரத்தில் கோயில் எழுப்புவம். அதனுள் வாழ்விக்கும் தகட்டை வைப்பம். வழிபடுவம் என்று எண்ணிக் கல்யாணர் எழுந்தார்.

என்ன ஸ்வாமி! புறப்பட்டு விட்டீர்களா? இதற்குள்ளாகவா? பதில் இல்லை, ஓ! பேசவே மாட்டீர்களா? சரி சரி.

ஆறுமாத காலமாக, இருந்த இடம் பெயராமல் இருந்தீர். அழுக்கு ஏறியது ஆடை. புழுதி படிந்திருக்கிறது மேனி. தலையெல்லாம் மண், ஐயய்ய! எங்கள் மாணிக்கக் கங்கையில் நீராடி, அதன்பின் தாங்கள் புறப்படலாமே!

ஆம். அதுதான் சரி. இங்கே வா! பெட்டியைப் பிடி! நீராடிய பின் வாங்கிக் கொள்கிறேன்.

கொடுத்ததை வாங்கினள் குறமகள். அதோ பாருங்கள், ஆற்று நடுவில் இறங்கி அவர் நீராடுவதை! அருள் வெள்ளத்தில் முழுகுவதுபோல், அவர்க்கு ஆநந்தமாக இருக்கிறது.

குடுகிடு குடுகிடு குடு. அதிர்கிறது வனம். ஓஹோ! எங்கே ஓடுகிறாள்? பெட்டியை வயிற்றில் அணைத்தபடி கண்மண் தெரியாமல் அல்லவா ஓடுகிறாள்!

திக்கென்றது மனம். என்ன இது? ஏதமில்லா முனிவர்க்கு, வேதனை பெருகியது.

நில்! நில்! ஓடாதே! நீரில் இருந்து கூவியபடியே, கரையில் ஏறினர் கல்யாணர். தொடர்ந்து துரத்தினர். காடு முழுதும் ஓடி ஓடிக் காலும் கடுத்தது. அகப்படாமல் இப்படி ஓட இவளுக்கு எப்படி முடிகிறது? ஆத்திரம் வரவர அதிகரித்தது. அதோ அதோ அகப்படுவாள் போல் தோன்றுகிறது. அவ்வளவு சமீபமாக, கல்யாணர் அணுகி யிருக்கிறார்.

ஏராயம் உன்னை என்றும் பணிகின்ற
பூராயம் எல்லாம் புரியஅருள் புண்ணியனே.

தழுவிப் பிடிக்கத் தாவினர். வேடர் வழிபடும் வேலன் கோயிலுள், குபுக்கென்று நுழைந்தாள் குறமகள்.

எரிந்தது வயிறு. அநாசார பரம்பரை. ஓங்காரக் கோயிலுக்குள் நுழைய, இவளுக்கு உரிமை. வைதிகன் எனக்கு வழியில்லை. என்ன சட்டம் இது? வருவது வருக என்று, துடிப்பொடு நுழையத் துணிந்தார்.

நில்! நில்! நில் என்று அதிரும் குரலுடன், வாயிலில் இருமாதர் வந்து நின்றனர். பொன்னிறத்தள் ஒரு பூவை. பசுமை நிறத்தள் ஒரு பாவை.

யார் நீங்கள்? எங்கே என் பெட்டி? இடிபோல் இருந்தது கல்யாணர் குரல். குளிர்ந்து எழுந்தது எதிர் குரல்.

இது சொருப தலம். உயர்தரு மங்கல ஜோதியின் உயிர்ப்பை, இங்கிருந்து எடுத்துச் செல்லல் மரபல்ல. அதனாலேயே பெட்டியை அகப்படுத்தினோம். சொருப கதிர்காமத்தை, உன் மூலம் வட நாட்டவரும் உணர, அகத்தியன் இங்கு உன்னை அனுப்பினன். தெரிகிறதா? ஆத்திரம் வேண்டா! அமைதி கொள்!

அப்படியானால், இதற்கு அரும்பாடு பட்டேனே! என்னே என் கதி என்று கல்யாணர், பொருமித் துடித்துப் புலம்பினர்.

பளிச் பளிச்சென்று மின்னல். காணவே கண்கள் கூசின. இரு தங்கக் கட்டிகளின் நடுவில் ஒரு சிங்கக் குட்டி. ஆம். தேவியர் இடையில் தெய்வ முருகன்.

ஆ! என்ன ஆநந்தமான அனுபவம்! எம்பெரும! வாழி அத்தா! வாழி தேவியர்! வாழி உன் அருள்! வாழி கதிர்காமம் என்று வாயாரப் பாடினர். பதைத்து உருகினர். ஓடி வீழ்ந்தார். எழுந்து திரும்பினர். ஊன்றி உணர்ந்தார். ஆகாத தீமையேன், அறியாமையால் அன்னையைத் தூரத்தினேன். பொறுப்பாயோ தாயே! மயிலேறும் பரமா! அயிலேந்திய அத்தா! மன்னிப்பாயோ என்னை மன்னிப்பாயோ என்று அழுது கதறித் தொழுதார்.

அன்பனே! எண்வகைச் சித்திகளும் உனக்கு எய்தும். இங்கிருந்தே நீ வழிபடவேண்டும் என்பது தேவியர்தம் எண்ணம். சிறந்த நீ விரும்பிய போதெல்லாம் சேவை தருவம்.

உனது பெட்டியில் உள்ள ஜொட்சரத் தகட்டிற்கு, நியதியான வழிபாடு இங்கு நிகழும். அதைச் சேவிப்பார்க்கு இனிய பேறு அருள்வம் என்று, தேவியருடன் உருக்கரந்தது தெய்வம்.

சீரார் தலம்பலவும் செல்வஅருள் சேர்நிலயம்;
ஆரார் பெற்றார் அவருள் யானொருவன் ஆவேனே.

இதுவோ உனது இன்னருள் என்று அமைதியடைந்த கல்யாணர், இதயாம்பரம் எய்தினர். பெற்றோரைக் கதிர்காமத்திற்கு அழைத்து வந்து, செவ்வேள் பெட்டகத்தைச் சேவிக்கச் செய்தார். வடநாடு முழுதும் நடமாடினர். கதிர்காம மகாத்மியம் எனும் சிறந்த சொற்பொழிவு செய்தார். அருமை யறிந்த அவர்களுள், பலர் வந்து தரிசித்துப் பயனடைந்தனர்.

இறுதியில் தாம் அத்தலத்தில் தங்கினர். தியானத்தில் இன்பம் திளைத்தார். இறைவன் திருவுளப்படி ஒருநாள், இலிங்கத் திருமேனி யாயினர். கதிர்காமம் செல்பவர், கல்யாண லிங்கத்தைச் சேவித்து, அதன்பின் கதிரேசன் வழிபாடு செய்ய வேண்டும் என்ற விதி இருக்கிறது. பெட்டியில் உள்ள அருள் ஒளித்தகடு, இன்றும் கதிர்காமத்தில் இருக்கிறது. நலமொடு மகோற்சவம் அதற்கு நடைபெறுகின்றது! வாழி கதிர்காமம்!

வாழிய முருகன் அடியவர்.

சென்னை அடியார் திருக்கூட்ட இறைபணி மன்றத்தினர் தல வழிபாடு

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்குஓர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்ற அருள்வாக்கினைக் கடைப் பிடித்து அடியார் திருக்கூட்டத்தினர் சென்ற திங்கள்கிழமை (4—6—56) இரவு 7—30 மணிக்குத் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் தல வழிபாட்டுக்குப் புறப்பட்டனர். இறைவனுளங் குளிர்ந்து இன்னருள் பொழிவதொப்ப மழையும் கொஞ்சம் பொழிந்து திருக்கூட்டத்தினரை வழிகூட்டி யனுப்பியது.

வண்டி புறப்பட்டது முதல் வடிவேல் நாமாவளிப் பாராயணம் வானைப் பிளந்தது. மறுநாள் (5—6—56) காலை 7-30 மணிக்கு மதுரை சேர்ந்ததும் திருக்கூட்டத்தினர், அருங்குணச் செம்மல் திரு. நாகலிங்கம் செட்டியார் அவர்களும், பெருங் கொடைச் செல்வர் உயர்திரு. A. S. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் தம் ஆதரவில் அளித்த

சிற்றுண்டி முடித்துத் திருப்பரங்குன்றம் சென்று தரிசனம் செய்தனர். அங்குள்ள ஆலய ஆணையாளர்களும், திருப்புகழ் சபையினரும் வரவேற்பளித்துச் சிறப்புச் செய்தனர். திருக்கூட்டத்தினர், நான்மாட வீதியில் திருப்புகழ் பஜனை முடித்து மதுரை திரும்பினர். மதுரையில் திருவாளர் A. S. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மாளிகையில் மிகச் சிறந்த விருந்தளித்தனர். மாலை 3 மணிக்கு திருக்கூட்டத்தினர் அழகர் கோயில் சென்று பஜனையுடன் வழிபாடு நடத்தினர். கோயிலதிகாரிகளும் மிக்க அன்புடன் வரவேற்றுபசரித்தனர். மாலை 6 மணிக்கு திருக்கூட்டத்தினர் அங்கயற்கண்ணி அம்மை தன்னொடும் அமர்ந்த ஆலவாய தனில் ஆலய வழிபாடு பஜனையுடன் நடத்தினர். மதுரை ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள திருப்புகழ் சபையில் சிறந்த வரவேற்பும் பாராயணமும் நிகழ்ந்தன. சிறுமி S. P. ஞான வல்லியின் 'வெற்றி வேலுற்ற துணை' சொற்பொழிவும், திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A. B.T. அவர்களது சொற்பொழிவும் நடைபெற்றன. மதுரை திருப்புகழ் சபை ஆசிரியர் பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் அவர்கள் பாராட்டுரை வழங்கினர். இரவு 10 மணிக்கு திரு A.S.சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் அங்காடியிலிருந்து திருக்கூட்டத்தினர் புறப்பட்டு மதுரை சித்திரைவீதியில் பாராயணம் செய்தனர். மதுரையில் இருந்த நேரங்களில் எல்லாம் நல்ல உண்டி, உபசாரம் முதலியன செய்து திருக்கூட்டத்தினரை மகிழ்வித்த திரு A. S. சோமசுந்தரஞ் செட்டியார், திரு. நாகலிங்க செட்டியார் உள்ளிட்ட அன்பர்களுக்கு திருக்கூட்டத்தினர் நன்றி என்றென்றும் உரியது. அவர்கள் செவ்வேட் பரமன் திருவருளால் சகல செல்வ மிக்க பெரு வாழ்வு பெறுவார்களாக.

(6—6—56) காலை 4 மணிக்குப் புறப்பட்டு 8-30 மணிக்குத் திருநெல்வேலி சேர்ந்தனர். அங்கு பல அன்பர்கள் வரவேற்பளித்தனர். பின்னர் ஸ்ரீ வைகுண்டம் சென்று தாமிரபரணியில் நீராடினர். அதுபோழ்து, "குமரகுரு

வாய்மையருள் நேருமென வானோக்கி நின்றேன்
தாயாகி என்னைத் தண்மைபெறச் செய்யாயோ.

பரன்'' பத்திராசிரியர் T. M. **குமரகுருபரன் பிள்ளை**, B.A. B.L. அவர்கள் அன்பு கனிந்துதவிய சிற்றுண்டியுண்டு, ஆழ்வார் திருநகரியில்ஆலயவழிபாடு முடித்துக்கொண்டு,ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ கண்ணபிரான் ஆலயம், ஸ்ரீ கைலாசநாதர் ஆலயங்களையும் தரிசித்து, திருப்புகழ் சபை, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருமடம், உயர்நிலைப்பள்ளி, வாசகசாலை, நூல் நிலையம் முதலியன கண்டு, பாளையங்கோட்டை வந்து, ஞான மணி அம்மை சத்திரத்தில் உணவு கொண்டனர். மாலை 4 மணிக்குத் திருநெல்வேலியில் பேரன்பர் திரு. T. R. **பிச்சையா பிள்ளை** அவர்கள் திருமாளிகையில் சிற்றுண்டியும் விசேட வரவேற்புரை வாசித்தலும் நிகழ்ந்தன. அருந் தொண்டராகிய திரு. பிள்ளையவர்கட்குத் திருமுருகன் திருவருளால் எல்லா நலனும் எய்துவதாக.

பின்னர் நெல்லைத் திருப்புகழ் சபைத் தொண்டர்கள் நயினார் கோவிலில் வரவேற்பளித்தனர். இரவு 7-30 மணிக்குப் பாளையங்கோட்டை ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் அதிபர் திரு. சோமசுந்தரம் அவர்களால் அலங்கரிக்கப் பட்ட மண்டபத்தில், திரு. ராமகிருஷ்ணன் குழுவினரால் நாதஸ்வர இசை விருந்து நடந்தது. பேராசிரியர் **நவநீத கிருஷ்ணன்** அவர்களால் சிறந்த வரவேற்புரையும், S. P. **ஞானவல்லியின்** சொல் விருந்தும், திருக்கூட்டத்தினரது திருப்புகழ் பஜனையும், சைவ சமய பிரசாரகர் திருமதி. **சிவகாமசுந்தரி அம்மையவர்களது நன்றியுரையும்** நிகழ்ந்தன. பின்னர் நெல்லை திருக்கூட்டத்தினர் ஆதரவில் ரதவீதிகளில் இரவு 2 மணி வரையிலும் திருப்புகழ் பஜனை நடைபெற்றது. மறுநாள் (7—6—56) வியாழன் காலை திருச்செந்தூர் சேர்ந்தனர். காலையில் அடியார் திருக்கூட்டத்தினர் நாழிக்கிணறு, வதனாரம்பத் தீர்த்தத்தில் நீராடிச் செந்திற்பதி புரக்கும் செவ்வேளைக் கண்ணாரக் கண்டு தரிசித்தனர். திருப்புகழ்ப் பெரியார் **பிரம்மஸ்ரீ வாரியார்**, ஸ்ரீ கணபதி சாஸ்திரிகள் அவர்கள் அன்புகனிந்த வரவேற்பும் ஆதரவும் சொல்லுந் தரத்தன அல்ல. ஆலய ஆணையாளர் திரு.

உண்டாய உயிர்கட்குள் ஒளித்திருந்தே எல்லாம்
கண்டாயே நாயேன் கலங்குதுயர் காணுயோ.

கிருஷ்ணமேனன் அவர்கள் ஆதரவும் மறக்கற்பாற்றன்று. சிரலைவாய்நகர் மேவிய கந்தனுக்கு வைர அங்கி சேவை நடந்தது. அன்பர்கள் செந்திநாதன் அருட்கடலிற் படிந்து திளைத்த பின் காலை 11—15-க்கு புறப்பட்டு 8—1—'56 வெள்ளி நாள் சென்னை சேர்ந்தனர்.

திருக்கூட்டத்தினருக்கு எல்லா வசதிகளும் அளித்த அன்பர்கள், சபையினர், ஆலய ஆணையாளர்கள் முதலி யோர்களுக்கும் வள்ளிமணாளன் வற்றாக் கருணையால் வள மெலாம் மன்னி ஓங்குவதாக.

வாழ்க சீரடியாரெல்லாம்

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை, B.A. B.T.)

திருவண்ணமலை:-

இத்தலத்துக்கென எழுபத்தெட்டு பாடல்கள் கிடைத்துள்ளன. அவைகள் மிக மிக ஆழமான கருத்துக் களை உடையன. ஒரு சில ஈண்டுத் தருகிறோம்.

திருவீதிகள்—திருக்கோபுரங்கள்

முருகவேளது கோயில்கள் அருணையின் எந்த வீதியி லும் கோபுரத்திலும் இருந்தாலும், அவை நம் சந்தமுனி வரது திருப்புகழில் இடம் பெற்றுள்ளன.

"செழுநீர் வயல்சுற் றருணபுரியில் திருவீதியினில்—
பெருமாளே

"அயிலறச் சேவல்கைக் கினிதாத் தோகையுற்று
அருணையில் கோபுரத்து—உறைவோனே

கையாத அன்பரகம் காண்கின்றாய் கந்தகுகா
தையா தக்கா எனுமுன் தாண்டவத்தைக் காணேனே.

"சிறுவ! வன்சரர் சிறுமியொ டுருகிய
பெரும! அருணையில் எழுநிலை திகழ்வன
சிகரி மிசை ஒரு கலபியில் உலவிய—பெருமாளே"

"திருவுலாவு சோணேசர் அ(ண்)ணுமலை
முகிலுலாவு விமான நவோ நிலை
சிகரிமீது குலாவி உலாவிய— பெருமாளே"

(நவோநிலை சிகரி - ஒன்பது நிலைக் கோபுரம்)

"இடையரி உலாவுமுக்ர அருணகிரி மாநகர்க்குள்
இனிய குண கோபுரத்தில்—உறைவோனே"

(குணம் - கிழக்கு)

"நிலமிசை புகழார் தலமெனும் அருணை
நெடுமதில் வடசார் — பெருமாளே"

"அருணைவந்து தென் திசை தனிலுறைதரு—பெருமாளே

"முத்தைத் தரு"—பதிகம்

சிவஞானக் கன்றாகிய ஞான சம்பந்தர் சிவஞானம் பெற்றவுடன் பாடிய முதற் பாட்டு, சொல்தோறும் சுவையும் கருத்தும் துதைந்துள்ளமை அறிஞர்கள் அனைவரும் அறிந்ததே. "புகலியில் வித்தகர்போல அமிர்த கவித் தொடை பாடத்" தொடங்கிய வேளையில் முருகவேள் அடியெடுத்துதவிய முதற் பதிகம் "முத்தை தரு" என்பதும் பல்வேறு சிறப்புக்களை அமையப் பெற்றுள்ளமை சிறிது நோக்குவாம்.

"முத்து" எனத் தொடங்கிய சிறப்பு

(1) உமைக்கு ஒரு முத்தாய் முளைத்த குருநாதக் குழந்தையான முத்துக் குமரன் உதவியது.

(2) முத்துத் தமிழால் திருப்புகழ் மொழியப்பட வேண்டுவது.

தண்டாத் திருவருட்குத் தகுமோ கண் பாராமை
விண்டால் வழிபுரியும் விமலா அருளுதியே.

(3) முத்து என்ற சொல் முக்தா-விடுதலை (சிப்பியி னின்று விடுபட்டது) என்ற பொருள் உடையது. வீடு உபதேச வாயிலாகப் பெறத் தக்கது ஆதலின். முக்தி குறித்துப் பேச 'முத்து' முதலிற் கூறப்பட்டது.

(4) முத்து அணிந்தார்க்கு அழகும், உடலின் வெம்மையினை நீக்கிக் குளிர்ச்சியும் அடைவிப்பது போல, திருப்புகழும் கற்பார்க்கெல்லாம் சிவஞானப்பொலிவுடன் பிறவி வெம்மை மாற்றித் திருவடி நிழல் (குளிர்ச்சி) தருவது எனக் குறித்ததாம்.

(5) முத்து—சளி என்னும் கபத்தை அறுப்பது. அதுபோல் திருப்புகழும் இப் புவியில் உயிர்விடும் காலத் தில் சிலேத்துமம் என்ற கபம் கட்டும் மரணப் பிணிக்கு மருந்தாவது என்க.

(6) முத்துப்போல் கள்ளமில்லா வெள்ளை (உள்ள மும்) யும், தெளிவும் பிறப்பிக்கும் சிறப்புடையது திருப் புகழ் என்னவுமாம்.

(7) "உ" என்ற எழுத்து 'காத்தல்' குறிப்பு உடைய பிரணவமாகிய "அ+உ+ம்" என்பதில் நடுவாக உள்ளது. அதை 'முத்து' என்ற சொல்லில் இருமுறை வைத்தலின், இம்மை மறுமை காப்புத்தருவது திருப்புகழ் என்றதற்கு (முத்தம்மை—என்பது நம் அருணகிரியாரின் அன்னை பெயர் ஆதலின்) அதனையே முதற்கண் வைத்து ஓதினர் எனவும் கூறுவர்.

முதலடி விளக்கம்

'முத்துக்களை வரிசையாக அடுக்கியது போன்ற அழ கிய பற்களின் வரிசை (தோன்றும் முறுவல்) உடைய (தெய்வ) யானை இறைவ! வேலேந்திய சரவணனே! முத் திக்கொரு வித்தான மூலமே! குருபரனே! என்று சொல் லும்' என்பது பொழிப்புரை.

பொய்யாத புண்ணியமே புனிதப் பொருளேநீ
செய்யாய் அருளென்னிற் செம்மை பெறுவேனே.

இப்பாடல் செவ்வேட் பரமன் அருணையருக்கு உபதேசித்தது என்பது, சிவனார் உபதேசம் பெறுமாறு சிவ ஞான தேசிகனிடம் விண்ணப்பித்தது இது என்று வரும் அடுத்த அடிக் குறிப்பால் தொனிக்கிறது.

முத்தி நிலை எய்துவோர் முப்பத்தாறு தத்துவம் கடந்தே பெறவேண்டும். இதனைத் தெய்வச் சேக்கிழார் "பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி" எனக் கூறியருளினர். ஆதலின் ஆறுறையு நீத்து அதன் மேனிலையை உபதேசிக்க எழுந்த முதலடி, புள்ளி யுடைய எழுத்துக்களை நீக்கி

"முத்தைத் தரு பத்தித் திரு நகை (10)
அத்திக்கு இறை சத்திச் சரவண (11)
முத்திக்கு ஒரு வித்துக் குருபர (11)
என ஓது (4)

36 எழுத்துக்களால் ஆகியுள்ள அழகை எண்ண எண்ண உள்ளம் உருகுகிறதல்லவா!

அத்திக்கிறை: ஐராவதம் என்ற தேவயானை வளர்த்த தால் தெய்வயானை எனப் பேர் கொள்வார் அமுதவல்லி அம்மை. இவர் உமாதேவியாரே யாவர். அதனால்தான் சிவனாருக்கு இடப் பாகத்தில் உமையம்மை இருத்தல்போல, இலை வேலண்ணல் இடம் பிரியாமல் இவ்வம்மையும் இடப் பாகமே இடமாகக் கொண்டுள்ளார். இக் கருத்தை,

"தூவிமாமயி லூர்பவன் சுடர்மதி அணிந்தோன்
தேவ யானையே திருந்திழை உமையவள் ஆமால்"

என வரும் இலிங்க புராண வாக்கிலுலறிக. அருளல் என்னும் இறைவனது ஐந்தாவது தொழில் கிரியா சக்தி

உய்வேன் குறையில்லை உன் தாள்கள் கண்டேனேல்
ஐயா திருமயிலை அத்தா அருளுதியே.

என்னும் அன்னையாராலேயே நிகழ்வது. மேலும், முருக வேள் முத்திக்கு வித்தான மூலமாகலின், 'திருமுத்தி மாது' 'மோன ஞான முத்தி மங்கை' எனப்படும் தெய்வ யானையாரின் திறம் விதந்தோதப் பெற்றது.

பத்தித்திருநகை

அடியார்க்கு அருளுதற்கு தேவகுஞ்சரித் தேவியா ரது முத்து நிறைத்த வெண் பல்லின் முழு நகையே போதும் போதும். முத்து பிறக்கும் இடங்கள் இருபது என்பர். அதில் யானை மருப்பில் முத்து பிறக்கும் எனப் படுகிறது. அவ்வகையில் தெய்வயானை (யின்) முத்தைத் தரு பத்தித்திருநகை மிகமிகச் சிறப்புடையது ஆகிறது.

முத்தைத்தரு........சரவண

என வரும் ஒன்றேகால் வரியில் கந்த புராணச் சுருக்கம் அமைந்துள்ளமை காண்க.

சரவண—என்றது அறுமுகன் சரவணத்தில் அவ தாரமானது.

'சத்தி'—என்றது வேலேந்தியது (அசுர சம்மாரம்)

அத்திக்கிறை—என்றது தெய்வகுஞ்சரி மணம் (தேவர் சிறைமீட்டு தெய்வப்பிடி மணந்தது)

கூறுவதால் அறிகிறோம். இனி கந்தபிரான் அவதார முதலி யன வரிசைபடக் கூறவில்லையே எனின் கூறுதும் :—

1. காரணத்தை முதலில் கூறிப் பின் காரியத்தைக் கூறுவதும், 2. காரியத்தைக் காட்டி அதிலிருந்து கார ணத்தை அறியுமாறு செய்வதும் என இரு முறைகள் உண்டு. அதில் இரண்டாவதாகிய முறையே இம்முத

வாலீச் சுரம்வாழ் வள்ளால் நினதருளாம்
பாலீந் தெனைவளக்கும் பான்மை நினதையா.

லடியில் காணலாம். 'தேவகுஞ்சரி தலைவா!' எனத் திருமணத்தை மங்கலம் பற்றியும் முதலில் கூறினர். பின் திருமணத்திற்குக் காரணமாகச் சூராதியர் ஒடுக்கத்தினை வேல் பெருமையாக 'சத்தி' என்ற சொல்லும், ஆறு பொறிகள் சரவணத்தின் வெறி கமழ் கமலப் போதில் அறுமுகனாக வீற்றிருந்தருளினமை 'சரவண' என்ற சொல்லாலும் பெற வைத்தார்.

இப் பாடலில் முருகனைச் சிவஞான தேசிகனாகவும், பார்த்தசாரதியான பச்சைமேனிப் பரந்தாமன் மெச்ச நின்ற மேலோனாகவும், வெவ்வசுரர்தமைத் தடிந்த வெற்றி வேலனாகவும் கூறுகிறார். மேலும் குகப்பரமனை வெற்றி வேல் பெருமாள் (சத்திச் சரவணனாகவும்) அடியார்க்கு நல்ல பெருமாளாய்ப் பட்சத்தோடு ரட்சித் தருள்பவ பவனாகவும், அவுணர் குலமடங்கப் பொடியாக்கிப் 'பொரவல' பெருமாளாகவும் பாடியுள்ளார். இந்த முறையில் முருகன் திருநாமம் புகல்பவர்கள்,

"முடியாப் பிறவிக் கடலில்புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப் படார்"

என்று அருளிய பயனை எய்துவர். ஆதலின் இப் பதிகம் ஓதுவார் பெறும் பேற்றையும் கூறியுள்ளமை மகிழத்தக்கதாம்.

இன்னும் பலவுள இதன் சிறப்பு அனைத்தும் இங்ஙன் எழுதி முடியாது. விரிவஞ்சி இதனோடு இவ் விளக்கத்தை நிறுத்துகிறோம்.

வள்ளிச் சன்மார்க்கம்

(கே. எஸ். நாகராஜன்)

இவ்வுலகில் எத்தகைய உடலோடு பிறந்தவரும் முற்பிறப்புக்களில் செய்த இருவினைகளின் பயனை அநுபவிக்கவே பிறந்துள்ளார். பகுத்தறிவு உடைய மனிதர் தாம் படும் துயரத்துக்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்து அத்துயரத்தை அகற்றிக் கொள்வதற்கு வழி தேடுகின்றனர். அத்தகைய முயற்சியில் தாம் வெற்றி பெறுமாறு, பரம்பொருளின் உதவியையும் நாடுகின்றனர். அம்முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுக் கடவுளது அருளைப் பெற்றோர், உலகத்திலுள்ள உபதேசங்களைப் புறக்கணித்து விட்டு, என்றும் நிலையாக உள்ள உண்மைப்பொருள் இன்னதென்று அறிவினால் அறிகின்றனர். ஆனால் அவர்கள் தாம் அறிந்ததை உள்ளதை உள்ளபடித் தெளிவாக உரைக்க முடிவதில்லை. ஆயினும், மனிதராகப் பிறந்தோர் துயர் அடைவதன் காரணத்தையும், அத்துயரத்தை அகற்றிக் கொள்வதற்கு உரிய எளிய வழியையும், பரம்பொருளின் கருணையையும், அவருக்கும் ஆன்மாக்களுக்கும் உள்ள தொடர்பையும், ஞானிகள் இறைவன் ஆணைப்படி ஓரளவு அறிவித்திருக்கின்றனர். அத்தகைய ஞானியருள் அன்பினால் சிறந்தவர் அருணகிரிநாதப் பெருமான்.

அருணகிரியார் தாம் இறைவன் அருளால் ஒப்பற்ற இன்பத்தைப் பெற்றதோடு அமையாமல், அதைப் பிறரும் அடையவேண்டும் என்னும் அருள் நோக்கம் உடையவர். அன்றியும், தம்மை அடையும் எளிய நெறியை உலகோர்க்குப் போதிக்கும்படி முருகப் பெருமான் அவருக்குக் கட்டளை இட்டு அருளினார். அதன் படியே அடிகளார் இறைவனடி சேர்வதற்குரிய நெறியை இனிய தமிழில் பாடியுள்ளார்.

காரணேஸ் வரங்கண்ட கண்ணுளா கந்தகுகா
பாரணவா தெனையுன்றன் பாதநிழல் வையாயோ.

உலகத்தில் மீண்டும் மீண்டும் பிறந்து இறப்பதற்குக் காரணம் நல்வினை, தீவினை என்னும் இரு வினைகளே. நல்வினைகளின் புண்ணிய பலனையும் தீவினைகளின் பலாபலனையும் அநுபவிக்கவே ஆண்டவன் நம்மைத் திரும்பத் திரும்பப் பிறக்க வைக்கிறான். ஒரு ஜன்மத்தில் அநுபவிக்க வேண்டிய பலனை அநுபவித்து முடிந்ததும், அந்த ஆன்மா மீதியுள்ள வினையின் பலனை அநுபவிக்க மறுபடியும் உடல் பெற்று வந்து உலகில் பிறக்கிறது. அவ்வான்மா அந்த ஜன்மத்தில் அநுபவிக்கவேண்டிய சகல வினைகளின் பலனுக்கும் ஒத்திருக்கும்படி அவ் உடல் சிருஷ்டிக்கப்படும். ஆன்மா அவ்வுடலை ஏற்றுக்கொண்டு மறு பிறவி எடுக்கிறது. உலக வாழ்க்கையில் உழன்று பலம் குன்றிச் சோர்வு அடைகிறது. பரம்பொருளை எண்ணுமலே ஆன்மா பிறவிகளைப் பாழாக்குகிறது. அறிவுற்ற பிறவியினும் ஆன்மா ஓரளவு ஞானம் பெறுவது பெருந்துயரமுற்று மூப்படைந்த பின்னரே.

எம்பெருமான் அருள் பெற்ற பெரியாரும் பிறவித் துன்பத்திற்கு அஞ்சுகின்றனர். பிறவியை ஒழித்து விடுமாறு ஆண்டவனை நோக்கித் திரும்பத் திரும்ப வேண்டுகின்றனர். இத்துன்பத்தைத் தவிர்க்க வழியுண்டா என்றால், வினைகளை ஒழிப்பது ஒன்றே ஆகும். தீவினைகளை அறவே ஒழித்தல் வேண்டும். நல்வினைகளைச் செய்யுங்கால், தாம் இறைவன் கட்டளைப்படி நடப்பதை உணர்ந்து, புண்ணிய பலனைக் கருதாமலும், மும்மலங்கள், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் ஆகியவை வந்து நெருங்காமலும் காத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு இரு வினைப் பயனையும் ஒழித்தோருடைய பிறவி என்னும் விலங்கை இறைவன் துகள் ஆக்குவார்.

உலக இன்பங்களும் ஆண்டவனால் அருளப்பெற்றவையே. ஆயினும் அவற்றை ஞானிகள் இழிதுப் பேசு

திருவான்மி யூர்வாழ் தெய்வகுகா எற்குக்
குருவாகி ஓரெழுத்து இஃதென்று கூருயோ.

கின்றனர். அதற்குக் காரணம், ஆன்மா அவற்றை அநு பவிக்கத் தொடங்கினால் அவற்றிலேயே முற்றும் ஈடு பட்டு, இறைவனை வழிபடும் நெறியில் சேரா வண்ணம் அவை ஆன்மாவைத் தடுப்பதேயாகும். உலக இன்பங்களில் லயித்துப் போகும் ஆன்மா, அவ்வின்பங்களுக் கெல்லாம் உறைவிடமான இறைவன் அருளை மறந்து போகிறது. இவ்வின்பங்களை அநுபவிக்க வேண்டுமென்கிற ஆசை, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் மூல மாகத் தான் உண்டாகிறது. அப்புலன்கள் எம்பெருமானை வழிபடுவதற்குப் பேருதவி புரிய வல்லவை. ஆகவே அவற்றை அடக்கிக் கடவுள் வழி பாட்டில் பொருந்தி நிற் கும்படி செய்து, அவன் அருளைப்பெற்று உய்ய வழிதேடு தல் அவசியமாகும்.

உலக இன்பங்களில் அகற்றக் கடினமானது சிற்றின் பம். 'கலவியின் நலம் அற்ப சுகமாயினும் மாஅநுபவம். இது சற்றும் விடவோ இயலாது' என்கிறார் அருணகிரி யார். சிற்றின்பம் நிலையற்றது. ஆயினும் அதிலுள்ள ஆசையை அகற்றுவது மிகவும் கடினம். அது எண்ணி றந்த ஆசைகளை உதிக்கச் செய்து மனத்தில் தாபத்தை உண்டாக்கும். இறைவனை முற்றிலும் மறக்கச் செய்யும். உள்ள சிறிதளவு அறிவையும் மாயையினால் மறைத்துவிடும். அதை அகற்ற ஆன்மா இறைவன் அருளை நாடவேண்டும்.

தேவர்கள் ஆணவம், கன்மம், மாயை, காமம், குரோ தம் முதலான உட்பகைவர்களின் கையிற் சிக்கித் தியங்கி, சிவபெருமானை அணுகித் தங்கள் துயரை நீக்கும்படி வேண்ட, தம்மையே நிகர்த்த ஒரு புதல்வனைத் தந்தருள் வதாகப் பெருமான் வாக்களித்தார். அவ்வாறே சிவபெரு மானது ஆறு திரு முகங்களின் ஆறு நுதற் கண்களிலிருந் தும் ஆறு தீப்பொறிகள் தோன்றின. கங்கைக் கரையில்

ஒற்றிப் பதிவாழும் ஓம்பொருளே என்னைப்
பற்றி இழுத்தேஉன் பாதத்தில் வைப்பாயோ.

உள்ள சரவணப் பொய்கையில் வீழ்ந்து ஆறு குழந்தைகளாக மாறின. பின்னர் உலக மாதாவான உமைப் பிராட்டியாரால் அணைக்கப்பட்ட போது ஆறு திரு முகங்களை உடைய ஒரு பாலகனாக அவை திரண்டன. இவ்வாறு தோன்றிய முருகப் பெருமான் ஒருவரே உலகுக்கெல்லாம் ஞானகுரு. இதை விளக்கவே சிவபெருமானுக்கும் முருகன் பிரணவ உபதேசம் செய்ததாக நடித்தது. அடியவர் அருள்நெறியில் செல்லா வண்ணம் தடுத்து நிற்கும் உட்பகைவரை அழிப்பதற்காகவே முருகப் பெருமான் போர்க் கோலத்துடன் மயிலின் மீது அமர்ந்து, திருச்சீர் அலைவாய் என்று வழங்கும் திருச்செந்தூரிலே காட்சியளிக்கிறார். அவர் அமர்ந்துள்ள இடமோ அலைவாய். பிறப்பு—இறப்பு என்னும் (சம்சாரம்) ஆழங்காண முடியாத சமுத்திரத்தில் துன்ப அலைகள் ஓயாது வந்து மோதுகின்றன. அச் சமுத்திரத்தின் கரையிலே அமர்ந்துகொண்டு, அடியார்க்கு அருள் புரிந்து காப்பாற்றக் காத்திருக்கிறார் எம்பெருமான்.

அப்பெருமான் அடியவர்க்கு எளியவர். அவரே உற்ற புகலிடம் என்னும் திடமான நம்பிக்கையோடு அவரைச் சரண் புகுந்தாரது துன்பங்களைப் போக்கி, அவர்களை முத்தி நெறியில் சேர்க்கும் பரமதயாளர். நல்வினைகளையே புரிந்து கொண்டு, அவற்றின் நற்பயனை கர்மக் குரோதாதிகளும் மும்மலங்களும் அழித்து விடாதபடி காத்துக் கொண்டு, எம்பெருமானது திருவடிகளை அடைய வேண்டுமென்று ஆவல் கொள்வோரிடம் அவர் ஆதரவுடன் சென்று ஆட்கொள்ளுவார். இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தவே இறைவன் வள்ளி நாயகியை ஆட்கொண்டு அருளியது. ஜீவாத்மா (பசு) வாகிய வள்ளி பரமாத்மா (பதி) வாகிய முருகனை அடைந்த நெறியை 'வள்ளிச் சன்மார்க்கம்' என்று திருப்புகழ்ப் பாடல் ஒன்றில் அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

கந்தகோட் டத்துறையும் காங்கேயோ என்னுள்ளம்
சொந்தகோட்டம் நிற்குச் சொல்கின்றேன் நிச்சயமே.

ஒவ்வொரு ஆன்மாவும் எம்பெருமானது திருவடிகளை அடைய வேண்டுமென்ற ஆவல் கொண்டு அவரை வழி பட்டு ஞான உபதேசம் பெறவேண்டும். அவ்வாறின்றி, வேறொரு ஆன்மாவிடமிருந்து உபதேசம் பெறுவது என்பது இயலாது. கல்லாலின் நிழலில் அமர்ந்த சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு ஞான உபதேசம் செய்தது எவ்வாறு எனில், அப்பெருமான் முனிவரது மனம் தம்மிடத்தே பொருந்தும்படி யாக்கினர். அவர்களுடைய புலன்கள் செயலற்றுப் போயின. அவர்கள் வேறொன்றையும் காணுமல் சிவ வடிவத்தையே கண்டார்கள். இவ்வாறே தாயுமானரும், 'ஜோதி மவுனியாய்த் தோன்றிச் சொல்லாத வார்த்தையைச் சொன்னுன், என்னைச் சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி, முன்னிலை ஏதும் இல்லாதே சுகமுற்றவே எனைப் பற்றிக் கொண்டான்' என்கிறார் ஆனந்தக் களிப்பில். மனத்தை எம்பெருமானிடத்தில் நிலை நிறுத்தி, மவுனம் உற்று, புலன்கள் செயலற்று இருக்கச் செய்தால், உலகத்தில் உள்ள ஜட பேதங்கள் அனைத்தும் மறைந்து, சுத்த வெட்ட வெளியில் இனிய பேரொளியே தோன்றும். இதுவே ஞானிகள் தேடும் நிலை.

<u>பெரிய புராணச் சித்திரவிளக்கம் 27.</u>

திருநீல நக்கர்

(கி. வா. ஜ.)

சோழ நாட்டில் காவிரிக் கரையில் ஒளிர்வது சாத்த மங்கை என்னும் ஊர். அங்கே மறையொழுக்கம் வழுவாத அந்தணாளர் பலர் வாழ்ந்து வந்தனர். அவருக்குள் நீல நக்கர் என்பவர் ஒருவர். சிவனடியாரிற் சிறந்தவர். சிவபிரானைப் பணிந்து வழிபடுவதும் சிவனடியார் திருவடியை அருச்சித்து வாழ்வதுமே வேதம் விதித்த தலைமை யான செயல்கள் என்று எண்ணி ஒழுகும் பண்புடையார்

சென்னை மல்லி கேச்சுரத்துச் செல்வா குமரேசா
என்னையளி என்னுமிந்த ஏழைமுகம் பாராயோ.

அவர். ஆகம விதிப்படி இறைவனை அருச்சித்துப் பூசை புரிந்து பின்பு சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தும் வேறு பணிகள் புரிந்தும் வாழ்ந்து வந்தார்.

அத்திருப்பதியில் உள்ள ஆலயத்துக்கு அயவந்தி என்று பெயர். திருவாதிரைத் திருநாளன்று நீல நக்கர் தம் இல்லத்தில் சிவ பூசையை முடித்துக்கொண்டு ஆலயம் சென்று அங்குள்ள சிவபிரானையும் பூசை செய்ய எண்ணிப் புறப்பட்டார். பூசைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு, தம் மனைவியையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்கு வந்து சேர்ந்தார். வந்து இறைவனைப் பூசை செய்யும்போது அவருடைய மனைவி வேண்டிய திரவியங்களை அவ்வப்போது எடுத்துக் கொடுத்து வந்தார். கணவன் செய்யும் பூசையில் தனக்கும் ஒரு பங்குண்டு என்று உணர்ந்த அப்பிராட்டி பேரன்புடன் அதனைச் செய்து வந்தாள். திருநீல நக்கர் அர்ச்சனையை விரிவாகச் செய்தார். பூசை யாவும் முறைப்படி நிறைவேறிய பிறகும் அவருக்கு மனம் நிறைவு உண்டாகவில்லை. இறைவனை வலம் வந்து வணங்கித் துதித்தார். பஞ்சாட்சர ஜெபம் செய்யலானார்.

அப்போது மேலிருந்து ஒரு சிலந்தி சிவலிங்கப் பெருமான் மேல் விழுந்தது. சிலந்தி குழந்தையின் மேல் விழுந்தால் அவ்விடம் புண்ணாகிவிடும் என்று கருதித் தாய்மார்கள் விழுந்த இடத்தை ஊதி எச்சில் உமிழ்ந்து துடைப்பது வழக்கம். சிவலிங்கப் பெருமான் மீது சிலந்தி விழுந்ததும் நீல நக்கரின் மனைவிக்கு அச்சம் உண்டாயிற்று. இது லிங்கத்தை என்ன செய்யும் என்று அவள் எண்ணவில்லை. அவளுடைய பாவனையில் எம்பெருமானே உருவத்துடன் எழுந்தருளி யிருப்பதாகவே கொண்டு வழிபட்டாள். ஆகவே சிலந்தி விழுந்தவுடனே தாயன்புடன் விழுந்த இடத்தை ஊதி உமிழ்ந்தாள். அவள் உமிழ்வதைக் கண்ட நீல நக்கர், நடுங்கிக் கண்ணை மூடிப் பின், 'அறிவில்லாதவளே, என்ன காரியம் செய்தாய்?'' என்று கேட்க, "சிலந்தி விழுந்தது; ஊதி உமிழ்ந்தேன்'' என்று கூறினாள்.

**கோடம்பாக் கத்துறையும் கோவேபொய்ஞ் ஞான
ஆடம்பர மகற்றி அடிஞானம் தாராயோ.**

அவளுடைய அன்பின் திறத்தை அறியாத நீல நக்கர், 'ஆசாரத்தோடு நாம் பூசை செய்ய, இவள் உசிதமற்றதும் அநாசாரமுமான காரியத்தைச் செய்தாள். இவளோடு வாழ்தல் தகாது' என்று எண்ணி, "இறைவன் மீது சிலந்தி விழுந்ததென்றால் அதை வேறு வகையால் போக்குவதை விட்டு, உன் ஊற்றை வாயால் ஊதி எச்சிலையும் துப்பினாயே! சிவலிங்கப் பெருமானுக்கு அபசாரம் செய்த உன்னோடு இனி வாழமாட்டேன். இப்போதே துறந்தேன்" என்று கூறினார்.

கதிரவன் மறைந்தான். தன் கணவர் கூறியதைக் கேட்டு வருத்தத்துடன் அந்தப் பெண்மணி ஒரு புறமாகப் போய்விட்டாள். நாயனார் இறைவனுடைய பூசையை முழுவதும் செய்துவிட்டுத் தன் வீடு சென்றார். அவர் மனைவியோ அச்சமும் வருத்தமும் நிரம்பிய உள்ளத்தோடு சிவாலயத்திலே இருந்துவிட்டாள்.

அன்று இரவு நீல நக்கர் படுக்கையில் படுத்துத் தூங்கியபோது, அயவந்தியில் எழுந்தருளிய இறைவன் அவர் கனவிலே அழகிய திருமேனியோடு நின்று, "இதோ என் உடம்பைப் பார்" என்று காட்டினான். அம்மேனியில் ஓரிடத்தைத் தவிர மற்ற இடமெல்லாம் கொப்புளங்கள் இருந்தன. "இதைப் பார்த்தாயா? உன் மனைவி அன்பினால் ஊதின இடம் அன்றி மற்ற இடங்களிலெல்லாம் கொப்புளமாக இருப்பது தெரிகிறதா?" என்று கேட்டார். திடுக்கிட்ட நாயனார் விழித்துக் கொண்டார். அன்பின் நிலை இருந்த வண்ணத்தை எண்ணி எண்ணி உருகினார்; இறைவனைத் தொழுது ஆடினார்; பாடினார்; துதித்தார். இறைவன் பெருங் கருணையை நினைந்து அழுதார்.

விடிந்தவுடன் அயவந்தி சென்று, இறைவனை வணங்கிப் பின் தம் மனைவியைக் கண்டு, அவளை அழைத்துக் கொண்டு தம் வீடு வந்து முன்புபோல் இல்லறம் நடத்தி வரலானார். சிவ பூசையும் அடியவர் பூசையும் குறைவற நடைபெற்று வந்தன.

தணிகைத் தலத்தாய் தயவுடையாய் என்பாவம்
தணிவுபெற வந்தென்றன் தாபம் தணியாயோ.

அக்காலத்தில் ஒரு நாள் சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு வரும் திருஞான சம்பந்தப் பெருமான் சாத்தமங்கைக்கும் அடியார் கூட்டத்தோடு வந்து சேர்ந்தார். அவருடன் திரு நீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் அவருடைய மனைவியும் வந்தார்கள்.

அவர்கள் வருவதை அறிந்த நீல நக்கர் ஊர் முழுவதும் தோரணம் நாட்டிப் பந்தல்கள் அமைத்துச் சுற்றத் தாருடன் எதிர் சென்று ஞானசம்பந்தப் பெருமானை வர வேற்றார். திருக்கூட்டத்தோடு அப்பெருமானையும் அழைத் துக்கொண்டு தம் வீட்டுக்கு வந்தார்.

தம்முடைய வீட்டில் சம்பந்தப் பெருமானுக்கு விருந்து அருத்தினார். இரவும் தம் மனையில் அப்பெருமான் தங்கும்படி ஏற்பாடு செய்தார். அப்போது சம்பந்தர், "நம்முடன் வந்திருக்கும் நீலகண்ட யாழ்ப்பாணர்க்கும் இன்று இங்கே தங்க ஓர் இடம் கொடுக்கவேண்டும்" என்றார். உடனே நீல நக்கர் சிறிதும் யோசனை செய் யாது தாம் வேள்வி செய்யும் குண்டத்துக்கருகில் அவர் துயில்வதற்கு இடம் அமைத்தார். சிவலிங்கப் பெருமான் மேல் உமிழ்ந்து அநாசாரமாக நடந்தாள் என்று அன்று முனிந்த அவர், இன்று சாதியில் தாழ்ந்தவரென்று கருதும் யாழ்ப்பாணருக்கு வேள்வி வேதிகைக் கருகில் துயில இடங்கொடுத்தார். அவர் மனம் இப்போது அன்புமயமாகி விட்டதன்றோ?

அப்போது அந்தக் குண்டத்தில் அருமல் இருந்த அக்கினி வலஞ்சுழித்து மிக்க சிறப்புடன் ஒளிர்ந்தது. 'இவரினும் தூயர் யாவர்?' என்று மறையவர் பெருமான் மனம் மகிழ யாழ்ப்பாணர் அன்றிரவு அங்கே துயின்றார்.

காலையில் சம்பந்தப் பிரான் எழுந்து நீராடி அயவந்தி எம்பெருமானைத் திருப்பதிகம் பாடிப் போற்றுகையில் நீல நக்கரையும் சிறப்பித்தார். அப்பால் அவர் விடைபெற்றுச் சென்றார்.

**அகத்தியருக் கந்நாள் அருளினையென் பார்மெய்யேல்
இகத்துறையும் என்றன் இடர்ப்பாடு தீராயோ.**

நீல நக்கர் ஞானசம்பந்தப் பெருமானுடைய நட்பைப் பெற்று மகிழ்ந்து வாழ்கையில், இடையிடையே அப்பெருமான் தங்கியிருக்கும் தலங்களுக்குச் சென்று சில நாள் உடனிருந்து வருவார். அவர்களிடையே நட்பு முதிர்ந்து வந்தது. சம்பந்தப் பெருமானுடைய திருமணம் நடைபெறும் பொழுது அவரும் சென்று அப்போது தோன்றிய சோதியூடே கலந்து சிவசாயுஜ்யம் பெற்றார்.

திருப்புகழ்

விரிவுரை

(திருச்செந்தூர்)

(குகஸ்ரீ)

கொம்பனையார் காது மோதிரு
கண்களில் ஆமோத சீதள
குங்கும பாடீர பூஷண—நகமேவு

கொங்கையில் நீர் ஆவி மேல்வளர்
செங்கழுநீர் மாலை சூடிய
கொண்டையில் ஆதார சோபையில் —
[மருளாதே

உம்பர்கள் ஸ்வாமீ நமோ நம
எம்பெரு மானே நமோ நம
ஒண்தொடிமோ காந மோ நம —
[என நாளும்

உன்புகழே பாடி நான் இனி
அன்புடன் ஆசார பூசைசெய்(து)
உய்ந்திட வீண் நாள்படா(து)அருள்—
[புரிவாயே;

நக்கீரர்க் கன்று செய்தநலம் மெய்யாயின்
அக்கிரமம் என்னையினும் அழையாமை ஐயா.

பம்பரமே போல ஆடிய
சங்கரிவே தாள நாயகி
பங்கயசீ பாத நூபுரி—கரசூலி

பங்கமிலா நீலி மோடிப
யங்கரிமா காளி யோகினி
பண்டுசுரா பான சூரனே(டு)—எதிர்
[போர்கண்(டு)

எம்புதல்வா! வாழி வாழிள
னும்படிவீ ருன வேல்தர
என்றுமுளா னே!ம னேகர! வயலூரா!

இன்சொல் விசாகா க்ரு பாகர!
செந்திலில்வாழ் வாகி யே அடி
யென்றனை யீடேற வாழ்வருள்—பெரு
[மாளே!

(**பதவுரை.**) பம்பரமே போல ஆடிய சங்கரி - பம்பரம் போல் (சுழன்று) ஆடி (ஆன்ம) இளைப்பை அகற்றும் அம்மை; வேதாள நாயகி-(தகுதி யுடைய) வேதாள (கணம் புகழ்) தலைவி; பங்கய சீபாத நூபுரி - தெய்வக் கமலம் போன்ற திருவடிகளில் சிலம்பு அணிந்த செல்வி; கர சூலி-முத்தலைச் சூலம் கரத்தில் கொண்ட முதல்வி; பங்கம் இலா நீலி-களங்கம் இல்லாத நீல நிறம் கொண்டவள்; மோடி-(யாவரையும் சுமந்து பெறும்) எடுப்பான திருவயிறு உடையவள்; பயங்கரி - அச்சம் அகற்றுபவள்; மா காளி - கனந் தங்கிய காளி; யோகினி - யோக சொரூபி எனவுள இறைவி;

பண்டு - முன்னொரு காலத்தில்; சுராபான சூரனோடு எதிர் போர் கண்டு - (பாழும்) மதுவைச் சதா பருகும் (அவைதிக) சூரபத்மனுடன் (முருகன்) எதிர்த்துப் போரிடுதலை நோக்கி;

ஊமைப் பிள்ளைக்கு உதவினை நீ யென்பார், அவ் ஊமை எழுத்தெனக்கு உதவுவதும் ஆகாதோ.

எம் புதல்வா - எமது குழந்தாய்; வாழி வாழி எனும் படி - (வெற்றி மிடுக்குடன் நீ) வாழ்வாயாக என்று (உலகம்) வாழ்த்தும்படி; வீறு ஆன வேல் தர - வேறு ஒன்றற்கும் இல்லாச் சிறப்புடைய ஞான சக்தியை அருள; என்றும் உளானே - (அதை ஏற்று) என்றும் உள்பொருளாக இருப்பவனே; மனோகர - இதய இன்ப தெய்வமே; வயலூரா - வயலூரில் வாழ் வரதா;

இன்சொல் விசாகா-இனிய மழலையுடன் விசாகத்தன்று இனிது வெளிப்பட்ட இறைவா; கிருபாகர - அருளுக்கு இருப்பிடம் ஆனவனே; செந்திலில் வாழ்வு ஆகியே - திருச் செந்தூரில் பெருவாழ்வுள்ள பெருமானாகி; அடியன் தனை - எளிய அடியனான என்னை; ஈடேற - கடைத்தேறும் படி; வாழ்வு அருள் பெருமாளே - பேரின்ப வாழ்வை அருளிய பெரியோனே!;

கொம்பு அனையார் - பூங்கொடி போன்ற பூவையரது; காது மோது இரு கண்களில் - செவிவரை ஓடி ஒளி வீசும் இரு கண்களிலும்;

ஆமோத சீதள - மகிழ்வு தரும் குளிர்ச்சியுள; குங்கும பாடீர - குங்குமக் குழம்புடன் சந்தனம் தடவியதும்; பூஷண-அணிபல சுமந்ததும் (ஆன); நகம் மேவு கொங்கையில் - குன்று போல் எடுப்பான (இரு) குயங்களிலும்;

நீர் ஆவி மேல் வளர் - மணிநீர்ப் பொய்கை மேல் மலரும்; செங்கழுநீர் மாலை சூடிய கொண்டையில் - (நீர்ப் பூவான) செங்கழுநீர் மலர் மாலை புனைந்த கூந்தலிலும்;

ஆதார சோபையில் மருளாதே - (கேசாதிபாதம் வரை பெண்மைக்கு உரிய) ஆதாரமான அழகிலும் (அடியேன்) அறிவு அலைமருதபடி;

உம்பர்கள் ஸ்வாமி நமோ நம- வானோர் பேறே வணக்கம் வணக்கம்;

எம்பெருமானே நமோ நம - எம்மை வாழ்விக்கும் தெய்வமே வணக்கம் வணக்கம்;

முருகம்மைக் காக முன்வந்தாய் என்பார்மெய்
உருகும் எனக்கிரங்கி முன்வந் துதவிலையே.

ஒண்தொடி மோகா நமோ நம என - ஒளியுள வளையல் அணிந்த வள்ளி மோகனே வணக்கம் வணக்கம் என்று;

நாளும் உன் புகழே பாடி - எந்நாளும் உன் திருப் புகழையே ஓயாது பாடி;

நான் இனி அன்புடன் ஆசார பூசை செய்து உய்ந்திட - அடியேன் இனிமேல் அன்புடன் வைதிக வழிபாட்டை வளரச் செய்து உய்தி யடையும்படியும்;

வீண் நாள் படாது அருள் புரிவாயே - எந்த நாளும் அவநாள் ஆகாதபடியும் திருவருள் பாலிக்க வேணும், (என்றவாறு).

சங்கரி

உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம். ஆனாலும் எண்பது கோடி எண்ணங்கள். இது என்ன பாவம்! இதன் பயனாக, உயிர்கள் ஓயாத துன்பத்தில் உழலுகின்றன. அதைக் கண்டு, பேரிரக்கம் தேவிக்குப் பிறக்கின்றது. சில காலமேனும் உடலின்றி உயிர்கள் ஓய்வு பெற்று இருக்க, எண்ணுகின்றது அந்த இறைவி திருவுளம்.

உடனே, **கோர வடிவைத்** தேவி கொள்கிறாள். அதோ பாருங்கள், பம்பரம்போல் சுழல்கிறது அவள் திருமேனி. அந்த அகோர தாண்டவத்தால், அகில உலகமும் மடங்கி மாயையில் ஒடுங்குகின்றன. அந்நிலையில், அந்தரத்தில் ஆன்மாக்கள் அணுவாய் அடங்கி விடுகின்றன. இப்படி, சால்பு பிறக்க இளைப்பாற்றுபவள் பெயர் **சங்கரி.**

சிலம்புச் செல்வி

உயிர்கள், அந்தரத்தில் அணுவாய் அடையும் அவதி பல. இதைக் கண்டு, மேலும் இரக்கம் கொள்கிறாள் எம்பெருமாட்டி. உடனே **குதூகலத் திருமேனி** கொள்கின்றாள். சிறந்த வேதங்கள், திருவடிச் சிலம்பாகின்றன. மதி குளிர்விக்கும் மந்திர நாதம், சிலம்பிலிருந்து சிலிர்க்கின்றது. நாதத்தி லிருந்து அணுத்திரள்கள், சுற்றி யெழுந்து சுழல்கின்றன. சுழற்சியி லிருந்து, உலகங்கள் பல உருவாகின்றன.

அருணகிரிக் கன்றுநீ அருளியது மெய்யானால்
இருள்மலத்தை நீக்கியெனை இன்பநிழல் வைப்பாயே.

'ஆரண நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி' என்று, அதைப் பார்த்துப் பாடுகின்றார் பரஞ்சோதி முனிவர். இப்படியே,

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே"

நிற்கின்றாள் நிமலை.

இவ்வளவு செய்தியையும் எண்ணி, 'பங்கயசீ பாத நூபுரி' என்று பாடுகின்றார் நம் தெய்வப் பாவலர்.

ஸ்ரீ பாதம் என்பது, சீபாதம் என்று திரிந்தது; திருவடி என்பது இதன் பொருள்.

வேதாள நாயகி

தேவ, அசுர, காந்தர்வ, யட்ச, சர்ப்ப, ராட்சச, கூஷ்மாண்ட, காம, கிரகண, பிரமராட்சச, யதாகாரிஷ, அர்த்த பிதா, பைசாச, ருகு, விருத்த, சித்த,முனி,வேதாளம் முதலிய பதினெண் வகைப் பூத கணங்கள், பராபரையை வழிபடுகின்றன.

அதமர்களைக் கண்டால், இவைகள் பாய்ந்து வந்து பற்றும். இதனால் புத்தி கெடும். வீணான போகத்தில் சதா விருப்பம் மூளும். லோப குணம் நேரும். அதர்ம சிந்தனை அமையும். ஆசார விரதங்களில் அலட்சியம் பிறக்கும். பெரியோர் நிந்தனை பேசச் செய்யும். மனம் போன போக்கில் போ! போ என்று போக்கி, ஆகாமிய வினையை அதிகம் பெருக்கும்.

இவைகளுள் வேதாள கணம், எடுத்து விழுங்குவன போல எதிரில் வரும். இவைகளை எண்ணவே இதயம் அதிர்கிறதே!

வரத தேவியை வழிபடுவார் முன், இவைகள் உவந்து வரும். உய்வழி காட்டும். அதனால்தான், நாடு முழுவதும் நம் பெருமாட்டி வழிபாடு நடைபெறுகின்றது. துஷ்ட நிக்ரகம் செய்யும் கணங்கள், சிஷ்ட பரிபாலனமும் செய்கின்றன; அதைக் கருதி, 'வேதாள நாயகி' என்று, புனித விமலையை முனிவர் போற்றுகிறார். முருகனும், 'வேதாள கணம் புகழ் வேலன்' என்று உணர்ந்துளது இந்த உலகம்.

வேண்டேன் உலகம் வேண்டேன்பொய் வாழ்வு
ஆண்டவனே எனையுன்றன் அடிநிழலில் வையாயே.

கரசூலி

மூன்று சக்திகள், தேவியின் முன்னிருந்து பணிசெய்வோர். இச்சை கிரியை ஞானம் என்பது அவர் பெயர்.

(1) ஏதம் இல்லாத உள்ளத்தில், தெய்வ இச்சையை எழுப்புதல்; (2) தெய்வப் பணியில் தெளிவுண்டாக்கல்; (3) தெய்வ ஞானம் நேரச் செய்தல் அவர் செயல்.

அதம உள்ளம் கொண்டு அழிவு செய்வாரை அடர்க்க, அந்த மூன்று சக்திகளும் முத்தலைச் சூலமாகி முன்னிற்பர். அமலை, அதை எடுத்து துட்டர் கொட்டம் தொலைப்பள். என்றும் கரத்தில் அதை ஏற்ற இறைவியை, 'கரசூலி' என்று கை குவிக்கிறது கவிஞர் இதயம்.

பங்கம் இலா நீலி

"அதர சோதி மீதாடும் குமுத வாச வாயார
அமிழ்த மாக நேராக அகில லோகம் ஈரேழும்
உதர சோபிதா நாபி கமல வாயினல் மீள
உமிழும் நீலி மேலாய உவண வூர்தி வூர்வாளே"

என்று தக்கயாகப் பரணி உரைத்தபடி, உலகை உண்டு உதரத்தில் இருத்தி, பின் வெளிப்படுத்திக் காக்கும் விமலை, கண் குளிர்விக்கும் நீலநிறம் கண்டவள்; ஆதலின், **பங்கம் இலா நீலி** என்று பாராட்டப் பெறுகிருள். (பங்கம் - கன்மச்சேறு)

மோடி

பெருந்தன்மை சிறந்த பெருந் தேவியை, 'மோடி' என்று போற்றுவர் முத்தான்மாக்கள். வாழும் உயிர்களைப் பெற்ற வயிறுடையாள் எனலும் ஒரு வகை.

'உயரமும் பெருமையும் வயிறும் மோடு' என்பது பிங்கலந்தை.
'போகமார் மோடி கொங்கை புணர்ந்த புனிதர்'

என்ற தமிழ்மறை இங்கு எண்ணத் தகும்.

பயங்கரி

அச்சம் அகற்றும் அம்மையை, வடநூலார் பயஹரி என்று வழங்குவர். அது இங்கு பயங்கரி என்று திரிந்தது.

**அகங்கறுத்து முகமினுக்கும் அநியாயச் சார்புநிறை
இகவாழ்க்கைநீக்கியெனேஎன்றேற்றுக் கொள்வாயோ.**

அச்சம் மறவர்க்கு அளிப்பள்; அறவர்க்கு அச்சத்தை அகற்றுபவள் என்பது இதனின் உள்ளுறை.

காளி

ஒளி வீசும் நெடும் சடையும், பெரும் காள நிறமும் பெற்று, அவுணர் வீழ அமரர் வாழ மாகாளியாகித் தேவி வருவள்;

'தருண வாள் நிலா வீசும் சடில மோலி மாகாளி
அமரர் வாழ்வு வாழ்வாக, அவுணர் வாழ்வு பாழாக
அருளும் மோகி னீயாகி அமுதபானம் ஈவாளே'

என்ற பரணியும்,

'சடையும் பிறையும் தாழ்ந்த சென்னிக்
குவளை உண்கண் பவளவாண் முகத்தி'

என்ற சிலப்பதிகாரமும், காளியின் கோலத்தை நம் கவனத்திற்குக் கொண்டு வருகின்றன.

யோகினி

யோகாம்பிகையான தேவி, இங்கு யோகினி எனப் பெறுகிறாள். இனிய அத்தேவியை வழிபட்டு, மோகினியரான யோகினியர் பலருளர். இவர்கள், இறைவியின் கோயில் முகப்பில் இருப்பர். சிதாநந்த யோக நிஷ்டை செய்வர். இன்பப் பெருமிதம் கொண்டு சிரித்து விளையாடும் இச் செல்வியர்க்கு அருள்பவள் நம் யோகினி.

(1) சார்ந்து இளைப்பகற்ற சக்கரி.
(2) காப்புச் செய்ய வேதாள நாயகி.
(3) உலகைத் தோற்றுவிக்க நாதச் சிலம்பணி நங்கை.
(4) ஆக்கமும் அழிவும் செய்ய சூலத்தாள்.
(5) உலகு குளிர உதவும் நீலி
(6) உயிர்களைத் தாங்கப் பெருவயி றுடையாள்.
(7) அச்சம் அகற்ற பயஹரி.
(8) மண்ணையும் விண்ணையும் வாழ்விக்க மாகாளி.
(9) யோக ஞானம் உதவவில் யோகினி என,

நவகோண நம்பெருமாட்டியின் ஒன்பது கோலங்களையும் உவந்து பாராட்டியபடி.

**என்றும் இருப்பமென எண்ணி இருள்பரப்பிப்
பொன்றுவார் சேர்க்கை பொய்க்க அருளுதியோ.**

ஆணவ ஆட்சியை அழிக்க விமல முருகன் வெளிப் பட்டான். உயர்ந்த அந்நிலைகண்டு உவந்த தேவி,

எம் புதல்வா! உன் வாழ்ச்சியை இனி உலகம் உணர்ந்து வாழ்வதாக என்று, வாழ்த்தினள். அதன்பின் ஞான சக்தியை அருளினள்.

கோமளை வேலாயுதத்தைக் கொடுக்கவில்லை; கொடுத்த வர் சிவபெருமான்தான் என்று சமய சச்சரவை அதிகம் எழுப்பி மாரடித்துக் கொள்வது மரபன்று.

'அழியாப் பேரளி உமைக்கண் நின்று
தற்பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த
அமையா வென்றி அரத்த நெடுவேல்'

என்று சொல்லாட வைக்கும் கல்லாடம், இவ்வர லாற்றைச் சுருக்கி உரைக்கின்றது. எம்பெருமாட்டியில் இயைந்திருந்து, சிவம் அளித்தது எனும் பெயரிட்டு, வெல் நீ என்ற உரையொடு உதவிய வெற்றி வேல் பெற்ருேய் என் பது இதன் பொருள்.

சிவச் செயலைத் தேவி செயலாகவும், இறைவியின் செயலை இறைசெயலாகவும் ஒன்றுதல் நோக்கி உரைப்பது சம்பிரதாயம். இப்படி வந்துள வழக்காறுகள் பல.

வெல்வது வேல்; ஞானமே அவ்வேல்; ஆதலின் அதற்கு எதுவும் இணையாவது இல்லை. அது கருதி, வீருன வேல் என்ருர்.

என்றும் உளன்

'ஆறுமுகனே தெய்வம் அவனே குருசாமி
வேறுமுள தெய்வம் விருதாவே—நாறுதரம்
மெய்சொன்னேன் சொன்னேன் வேத முடிபதுவே
பொய்சொன்ஞல் நாப்புழுத்துப் போம்' என்ருர் ஒருவர்.

மூர்த்தங்கள் எல்லாம் முருகனில் உள. விரித்த போது அவை பலவாகி விளங்கும். ஈர்த்த காலத்தில் அவைகள் அவனில் அடங்கும். ஆதலின், அவன் ஒருவனே ஏகனுகி என்றும் உளான் என்ருர்.

ஆசையாம் பேய்வாய் அகப்பட் டழிவுபுரி
நீசர்கள்தம் நட்பெனக்கு நீங்கக்கண் பாராயோ.

மனோகரன்

ஆனந்தமே குஹப்ரஹ்மம் ஆதலின், '**மனோகர**' என்றார். இதயத்திற்கு மெய்ம்மை இன்பமாக இருப்பவன் என்பது குறிப்பு.

அருள்கோலம் பலகாட்டி அழைத்து ஆண்ட தல அருமை எண்ணி, **வயலூரா** என்றார்.

'இதமொழி பகரினும் மதமொழி பகரினும்' ஆதரவு காட்டும் அவன் போலும் இனிய மொழியர் உலகில் இல்லை யாதலின், 'இன்சொல் விசாகா' என்றார்.

விசாகன் என்னும் பெயர், வைசாக புண்ணிய காலம் நேர சரவணத்தில் வந்தவன் எனும் பொருளது.

கிருபாகரன்—கருணைக்கடல் எனினுமாம்.

ஆன்ம உணர்வு தங்கும் திருச்செந்தூரில் ஆநந்த வாழ்வாய் அமர்ந்தவனே! அந்த வாழ்வை அடியேன் கடைத்தேற அருள் என்று பிரார்த்தித்த செய்தி இறுதி யடியில் இருக்கிறது.

ஆறு எழுத்தாளனை, ஆறுபடை வீடு உடையானை, ஆறு ஆதாரனை, ஆறு அத்துவாக்களில் அமர்ந்தானை,

(1) என்றும் உளானே! (2) மனோகர! (3) வயலூரா! (4) விசாகா! (5) க்ருபாகர! (6) பெருமாளே என ஆறு பெயரிட்டு அழைத்து, அப்பனே! மாதர் கண்களில், குயங்களில், கொண்டையில், மேனி மினுக்கில் எளியேன் மயங்குவது என்? இது சிறுமை. உனது படைப்பில் இப்படி ஒரு அருமை என்று எண்ணுவது பெருமை.

மதியில் தெளிவு இருந்தால் இப்படி மனம் மருளாது. தெளிவுபெற்று, நின்னைப் பாடி வழிபட்டு, உய்தி யடைய உதவு என்று வேண்டுகின்றது இத்திருப்புகழ்.

ஸ்வாமி என்பதற்கு, சொத்து என்பது பொருள். உம்பர் - மேலிடத்தார்; மேல் நோக்கிய உணர்வினர் பெறும் மெய்ப்பொருளை, 'உம்பர்கள் ஸ்வாமி' என்று விரிட்டு விளித்தார்.

உண்மையிலன் வாய்மை ஒன்றுமிலன் அந்தோ
எண்மையிலார் சேர்க்கை எந்தையிது செய்ததுவே.

நாமார்க்கும் குடியல்லோம்! உனக்கே மீளா ஆளானோம் என்பார், 'எம்பெருமானே' என்றார்.

ஆன்மாவாயிருந்து ஆகர்ஷிக்கிறாள்; வள்ளியா யிருந்து வள்ளலை யீர்த்தாள்; வைகுந்தத்தில் சுந்தரியாகி, பார்வதி போல் இமயத்தில் இருந்து, தற்பர முருகனைத் தவத்தில் இழுத்தாள்; எம்மான் வலத்தில் இச்சா சக்தியாகி இன்றும் இருக்கின்றாள் எம் அன்னை.

ஆன்ம பரிபாகத்திற்குத் தக்கபடி, அம்மான் மேல் இச்சை எழுப்பும் அது கருதி, அருள் வடிவனுக்கு, மோகம் தேவிமேல் மூள்வது முறை என்பதை, ஒண்தொடி மோகா என்பதில் உணர்த்தினர்.

நம ஓம் நம என்பது, நமோ நம என்றாயது: ஓம் பொருளான அறுகோணத்து அப்பனுக்கு ஆறுதரம் நமஸ்காரம் என்று அறிவித்தபடி.

வாய்படைத்த பயன் பாடுதல். அன்பு கொள்வது அகத்தின் செயல். ஆசார பூஜை காயத்தின் கைங்கர்யம். என் வாழ்நாள், மண் பெண் பொன்களை எண்ணி வீணாகாமல், திரிகரண வழிபாடு என்றும் நேர இனிது அருள் என்று பிரார்த்தித்தபடி.

வாழ்க வையகம்

அரிதா? எளிதா?

(மு. பொன்னையா பிள்ளை)

சென்ற தை, மலர் 7, இதழ் 10-ல் விழித்த பின்பு கனவுண்டா? என்பதற்கு, பிறவி முதலிய ,சர்வ விவகாரமும், அஞ்ஞான நித்திரையில் மனதாற் கற்பிக்கப்பட்ட கற்பனையாம். இவை ஆன்ம ஞானசாக்கிரத்தில் விழிக்கப் பொய்யாம் என விடை அளிக்கப்பட்டது. மனம் பற்றி விசாரித்தல் நலமாம் என்றிருப்பதால் இந்த மனதை அடக்குதல் அரிதெனப் பல அறிஞர்களும், எளிதெனச்

கற்றதெலாம் பேசிக் கனிவுமனம் காணேதென்
முற்றறிவால் நீபொறுத்து முன்வந் தருளுதியோ

சில அறிஞர்களும் கூறிப் போந்தனர் ஆதலால் மனதின் உண்மையைச் சிறிது ஆராய்வோம்.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற". தோற்றாவாகியஉலகில் 7 வகைப் பிறவி களில் ஆறறிவுள்ள மக்கட் பிறவி மிக அருமை.

இப் பிறவியே முத்தி சாதனமாகும். ஆதலால் சத்துக்கள்,

"பெறலரிது மக்கட் பிறவி"

என்றும், மானிடராய்ப் பிறத்தல் அரிது எனவும் கூறி யுளார்.

அரிதாய மக்கட் பிறவி, சீவர்களது கர்மத்திற் கீடாக, கடவுளால் கொடுக்கப் பட்டது. இதைப் பெற்ற சீவர்கள், தனது உண்மை விளக்கம் இன்பமாய், யதார்த்த ஸ்வரூப மாய ஆன்மாவை உள்ளவாறு உணர்ந்து உய்வதே பிறப்பின் பயனாகும். பயனாய கதியும்,

"ஞானமலது கதி கூடாது"

என்றதால் ஞானம் அவசியம் வேண்டும். ஞானமோ, விசாரணையால் உண்டாம். எதனை விசாரிப்பதெனின்,

இப்போது நமது அனுபவத்தில் இருப்பது செகம், சீவன், பரம் என முப்பொருள். இதில் செகத்து பிரத் தயட்சம். சீவனும், பரமும், அப்பிரத்தியட்சம். இந்த மூன்றும் திரிபுடி யெனப்படும். திரிபுடி யென்பது, காண் பான், காட்சி, காணப்படும் பொருள் என்றும்; அறிவான் அறிவு, அறியப்படு பொருள் என்றும்; ஞாதா, ஞானம், ஞேயம் என்றும் புகல்வர்.

இதில் காண்பான் சீவன்; காட்சி அறிவு; காணப்படு பொருள் நாம ரூப மயமான செகத்து. மூன்றும் தோன் றல் மாத்திரமும் சொல் மாத்திரமுமாகும். "சீவனென் கின்ற சொல்லும் பொருளுமாய்ச் செறிந்த ஆன்மா"

வள்ளியொடு தெய்வகரி வலமிடமா வேலேந்தி
கள்ளம் அகல் மயில்மேல் நின்கோலம் காட்டுதியோ.

யென்றனர் மேலோர். இந்த ஆன்மாவிற் கற்பிதமாய தோற்றத்திற்கு அனுஷ்டானம் பிரஞ்ஞை யாகும்: இந்த பிரஞ்ஞை ஸ்புரணம், ஞெப்தி, தற்போதம், அகம், மனம், புத்தி எனப் பல பெயரால் வழங்கப்படும்.

ஆரோப செகத்திற்கும் அதிஷ்டான பிரஞ்ஞைக்கும் ஆதாரம் ஆன்மாவாம். ஆன்மா நித்தியமும், விபுவும், பூரணமுமாம். இந்த ஆன்மாவில் ஆரோபத் தோற்றரவாய செகத்தாதி திரிபுடி, ஆகாசத்தில் நீலமும், கயிற்றில் அரவும், கானலில் சலமும், கிளிஞ்சிலில் வெள்ளியும், கட்டையிற் கள்ளனும், முயற்கோடும் போன்று தோற்றல் மாத்திரமாம்.

யாது போல்வது எனின்? ஒருவன் சரீரம் தானாக இருந்தும், சரீரத்தில் ஏகதேச உறுப்பாய நேத்திரத்தினின்று தன் சரீர முழுதும் பார்ப்பதுபோல், நித்திய விபுவாய ஆன்மா பூரணமாயிருந்தும், தன்னில் ஸ்புரித்த ஏகதேசமாய பிரஞ்ஞையினின்று தனது வியாபக வடிவை தனக்கு வேறாக நினைத்து நோக்க ஆச்சர்யமாயும், அபாரமாயுந் தோற்ற இது செகத்தெனவும், இதைச் சிருஷ்டிக்க ஓர் கர்த்தாவுளன் அவனே எல்லாம் வல்ல இறைவன் என எண்ணும் நினைப்பே நான் எனும் அகமாய சீவனும்.

இந்த அகம் வஸ்துக்களை நிச்சயிப்பதால் புத்தி; சிந்திப்பதால் சித்தம்; மனனத்தால் மனம் எனப்படும். இம் மனம் தன்மை, முன்னிலை, படர்க்கை மூன்றிடத்தில் ஆகாரமாய படர்க்கையில் அனுபூதியாய் சீவத்வமும்; அறிவாய முன்னிலையில் அனுபூதி யாயபோது ஈசத்வமும், தன்மையாய நான் எனும் அகத்தில் அனுபூதி யாயபோது பிரஞ்ஞா ஸ்வரூபமுமாம்.

இந்த மூன்றிடத்தும் அகம் என்ற ஞாபகம் இருப்பதால் யாவும் பிராந்தியே. உண்மையன்று. அகம் இதம்

மும்மாமன் மும்மாமி முருகா உனக்கென்பார்
அம்மா நின் ஆடல் அறியுந் தரமாமோ.

இரண்டின் மத்தியகதமாய் விளங்கிப் போவதே யதார்த்த அனுபூதியாம் எனல் சத்துக்கள் அனுபவம்.

இவ்வித தோற்றரவாய செகத்தாதி 3-க்கும் அதிஷ்டான காரணம், நான் எனும் தற்போதமாய மனதே யாதலால், இந்த மனதை அடக்கல் அரிதெனவும், எளிதெனவும் கூறிப் போந்தனர் உண்மை உணர்ந்த சத்துக்கள் பலரும்.

இங்ஙனங் கூறிப் போந்ததை ஆராயுங்கால், இவர்கள் தங்கள் பருவ பேதங்களில் அவ்வப் போதுள்ள அனுபவத்தைப் பிறரும் அறிந்து உய்தற் பொருட்டு, ஜீவர்களிடம் வைத்த கருணையாற் கூறிப் போந்ததாக அறியலாம்.

பருவ பேதமாவது, ஓர் உடம்பில் பாலிய முதல் விருத்தாப்பியம் வரை வரும் பேதங்கள் போல், இவர்களிடம் கர்மி, முமூக்ஷு, அப்பியாசி, அனுபவி, ஆரூடன் என உண்டாம் பேதங்களில்,

கர்மியாக இருந்த போது பக்தி, சிரத்தை, விஸ்வாஸத்துடன் பிரபல சுருதி கூறியபடி விலக்கியதை நீக்கி விதித்ததை ஒழுக்கந் தவறாது செய்யுங் கர்மிகளுக்குக் கருவி மனமாயதால், இந்த மனதை ஒருமைப் படுத்தல் பிரயாசையாம். ஆதலால் அத் திசையில்,

"சிந்தையை அடக்கியே சும்மாயிருக்கின்ற திறம் அரிது" என்றும்,
"உஞ்சலை யொத்து அலைவது தன் சுபாவமாகி ஒரு
கணத்திற் பலவுலகா உதிக்கும் இந்த நெஞ்சகம்" எனவும்,
"பாழான வென்மனம் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ" எனவும்,
"பாவி மனக் குரங்காட்டம் பார்க்க முடியாதே" எனவும்,
"நானென்றும் நீ யென்றும் இரண்டில்லை யென்னவே நடுவே
மூளைத்த மனதைக், கட்ட அறியாமலே வாடினேன்" எனவும்,
"நானென வுன்னு பாவனைதான் துன்பஞ் செய் சித்தமாம்
இது தீர்ப்பது மிக வன்பாம்" எனவும்,
"கடுமனவன் பேய் கனலிற் கொடிது" எனவும்,
"நெஞ்சக் கனகல்" எனவும்,
"திணியான மனோசிலை" "கல்லேய் மனம்" எனவும்,

இது போன்றே பலர் கன்மியா யிருந்த போதுகூறியுள்ளார். இந்தக் கன்மியானவன்,

"மூடமொடுதன் சாதி கருமமே பற்றி முத்தனும், அவன் நூறு
பிறப்பினில் ஒண் கருமி"

என்றனர். மனித ஜென்மம் 100-ல், முத்தி இனி இந்த திசை முமுக்ஷுவாய போது.

"எண்ணுதது எண்ணிய நெஞ்சே துயரொழி"
"அற்ப மனமே அகில வாழ்வத் தனையும்
சொப்பனங் கண்டாய்"
"நினைக்கத் தனக்கு அறிவில்லா மனத்தை நிலை யென்பரே'

எனவும்,

"வாழாத வண்ணமெனைக் கெடுக்கும் பொல்லா வஞ்சக
நெஞ்சு" எனவும்,
"மெய்விட்ட வஞ்சக நெஞ்சாற் படுந்துயர்
வெந்நெருப்பின் நெய்விட்ட வாழ்க்கை" எனவும்,
"மனத்தை அடக்க மனந் துணையாகும்
பினத் துணையில்லை பிதற்றவும் வேண்டாம்" எனவும்,

இதுபோன்றே பலர் முமுக்ஷுவா யிருந்தபோது கூறியதாகும்.

(தொடரும்)

Heroism of Draupadi

Allegories have always been useful means of instruction and the events described in the Mahabharata are, more often than not, rich allegories replete with spiritual instruction of the highest order. The attempt of the Duryodhanas to dishonour Draupadi before an assemblage of men, and the marked failure of the attempt are very instructive to the student of piety.

Draupadi is the mind and the Pandavas are the five indriyas of whom Dharmaputra is the leader. The indriyas uncontrolled by the mind,

attempted to make a short-cut to fortune by gambling with life, and Draupadi is the very essence of life. It was a miserable failure. The five indriyas who were the weapons of mind action were lost to the mind, their prowess and strength having become paralysed by the results of sinful gambling. For, man is a born hero who is destined to add treasures to himself by dint of conquest, in open aud dharmic fights, and not a contemptible pick-pocket. The forces of evil began to attack the mind and to dishonour it. There were none left who can help. Good and great souls in the assembly could but sympathise, but could not help to avert the attack of the evil forces. In the world of the mind, the strength to resist comes out of itself alone. No force from outside is of any avail. An army of powerful heroes could not help one from the agonies of his evil distressing dreams. The subject must wake up to dispel the enemies that attack him in his dreams. Many a man is thrown in conditions not dissimilar to that of Draupadi, when she was sought to be dishonoured before an assemblage of some good men and more of evil asuras. In all such situations, the one everlasting, unfailing friend and protector is GOD. Draupadi closed her eyes. Her mind ran to Lord Sri Krishna. She cried "Hari! Hari!" Her body was left standing unconscious as a dead stem. The harrowing condition of a Bhakta can never go without immediate help from the Lord

Divine. Lo! In the midst of a relentlessly cruel gang, Sri Krishna appeared. Sri Krishna by His mystic power covered Draupadi with innumerable and colourful clothes and sarees, when the miscreant sought to expose her in all nudity. Our clothes, our husbands, our children, our army of waiters, our fortune, will not always avail when trials come on. Do not rely on them. Sri Hari, the one husband of all lives of all the worlds, He is the one abiding succour of every life. Not all the good men of the world, Bhishmas and Dronas, can be of any avail. Hari is the one protector of the honour and name of His devotees. The protecting Lord lives in the minds of His devotees and more so in the minds of their enemies - there to despoil them and to establish Dharma in the world. Of all Dharmas, Bbakti is an imperative Dharma without which no man can conquer the summit of spirituality. This is a wonderful story by which men are called upon to ascend by Bhakti the peaks of spirituality and become the victors of all mountain tops - not merely tops of pleasure but also tops of suffering and adversity. Hari! Hari!

Thiruppugal Mani

155

அன்பொடுன் அடியார் அடிமலர் பணியேன்
அருள்திரு நீற்றினை யணியேன்
வன்பவப் பிணிதீர் கண்மணி புனையேன்
வாயினால் அஞ்செழுத் தோதேன்
புன்புலால் யாக்கை பொதிசுமக் கின்ற
புலையனேற் கருள்தரல் என்றோ
மன்றலம் கமழும் வடதிரு முல்லை
வாயில்வாழ் மாசிலா மணியே

MAHAMAHOPADHYAYA
DR. U. V. ... LIBRARY,
BESANT NAGAR :: MADRAS-90.

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. M. No. 5390, Amirthavachani (1956 ஆனி—அமிர்தவசனி)

156

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS). LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press